விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 1999, ஆடி 9உ புதன் (24-7-68) ரபி: ஆகி. 27 புத்தகம் 22 இதழ் 43




மாவட்ட சபை: தமிழ் காங்கிரசின் துரோகத்துக்கு பீலிக்ஸ் பாராட்டு

வெள்ளையறிக்கை விவாதத்தில் எதிர்க்கட்சி கலந்து கொள்ளாததற்கு விளக்கம்!

# சிங்களவர்களிடையே மோதல் ஏற்படுத்த நாம் விரும்பவில்லை

## தமிழ் கட்சிகள் தங்களுக்குள் மோதிக் கொள்ளவைத்தோம்

### பாராளுமன்றத்தில் பீலிக்ஸ் வெளியிட்ட கூற்று!

"மாவட்டசபை மீதான வெள்ளையறிக்கை விவாதத்தை கூட்டுக் கட்சிகள் பகிஷ்கரித்ததற்கு காரணம், இப் பிரச்சினை மீது சிங்கள மக்களின் இரு பெரும் கட்சிகளும் மோதிக் கொள்வதை நாம் விரும்பாததே.

"கூட்டுக் கட்சிகள் கையாண்ட இந்த இராச தந்திரத்திலே சிங்களவர்கள் தங்களுக்குள் மோதிக் கொள்வது தடுக்கப்பட்ட அதே வேளையில் இச்சபையில் மாவட்ட சபை மீது தமிழர்களும் தமிழர்களும் மோதிக்கொண்டார்கள்.

"மாவட்டசபையை எதிர்த்து தமிழ் காங்கிரஸ் தலைவரே தமிழரசுக் கட்சியுடன் மோதிக் கொண்டார். நமது இராச தந்திரத்தால், இருபெரும் சிங்களக் கட்சிகள் தம்முள் மோதிக்கொள்வதை தவிர்த்துக் கொண்ட

(7-ம் பக்கம் பார்க்க)

## தனிச் சிங்கள ஆட்சி அமைக்க

## யூ என். பியும் சு.கட்சியும் ஒன்று சேர வேண்டுமாம்

தமிழர்களின் ஆதரவின்றி இந்நாட்டில் ஓர் தனிச் சிங்கள அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும். அதற்கு சிங்கள மக்களின் இரு பெரும் கட்சிகளான ஐ. தே. கட்சியும் சுதந்திரக் கட்சியும், ஒரு கொடியின் கீழ் ஒன்று சேர வேண்டும். இல்லாவிடின் தமிழர்கள் ஆதிக்கத்தை தடுக்க முடியாது"

இவ்வாறு குளியாப்பிட்டியாவில் நடைபெற்ற ஓர் கூட்டத்தில் வண. ஹேவான சாரணதிஸ்ஸ பிதான நாயக தேரோ கூறினர்.


அவர் மேலும் கூறியதாவது:-

தேசிய அரசாங்கம் மாவட்ட சபைகளை இப்போதைக்கு கைவிட்டாலும் எதிர்காலத்தில் வரும் அரசாங்கம் மாவட்ட சபைகளை கொண்டுவர முயலும். இதற்கு காரணம் சுதந்திரக்

(7-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்ச் சட்டத்தை அமுல் நடத்துவதில் அரசகரும மொழித்திணைக்களத்தின் அக்கறையினம்!

### மற்ருெரு "தோவ" விபத்து!




## பிரதமரிடம் நாகா புகார்! விசாரணை நடத்த உத்தரவு!

தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்தையும் அதன் கீழ் இயற்றப்பட்ட 1966ம் ஆண்டின் தமிழ் மொழிப் பிரமாணங்களையும் அமுலாக்குவதில் அரசகரும மொழித்திணைக்களம் போதியளவு அக்கறை காட்டவில்லையென்று தமிழரசுக்கட்சி பிரதமரிடம் புகார் செய்துள்ளதாகத் தெரிய வருகிறது. இவ்விஷயத்தைப் பிரதமரின் கவனத்துக்கு கொண்டு வந்த தமிழரசுக்கட்சித் தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநதன், இது பற்றி பிரதமர் உடனடியாக ஓர் விசாரணை நடத்த வேண்டுமெனக் கோரியுள்ளார்.

டாக்டர் நாகநாதனின் வேண்டுகோளையடுத்து தமிழ் மொழிச் சட்டத்தை அமுல் செய்வதில் இதுவரை அரசகரும மொழித்திணைக்களம் எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி தமக்கு உடனடியாக ஓர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரசகரும மொழித்திணைக்கள ஆணையாளருக்கு பிரதமர் உத்தரவிட்டுள்ளதாக அறியப் படுகிறது.

பிரதமருக்கு டாக்டர் நாகநாதன் கொடுத்திருக்கும் புகாரில், அரசாங்க சார்பான கூட்டுத்தாபனங்கள் வெளியிடும் அறிவித்தல்கள் அரசாங்க வர்த்தமானியில் தமிழிலும் இடம் பெறுவதில்லையென்றும், காலிஸ்தானங்களைப் பற்றிய விளம்பரங்கள் அரசாங்க வர்த்தமானியில் தமிழிலும் இடம்பெருததால், பல தமிழ் வாலிபர்கள் வேலைகளுக்கு விண்ணப்பிக்கும்

(7- ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தப் பிசாசு

கே. எஸ். ஆனந்தன்

அத்தியாயம்-25

## அழகிய அழகி கொலை

காலை விடிந்துவிட்டது. ஆனால் கீதாவுக்குச் சுய உணர்வு வரவில்லை. அவள் அடிக்கடி ஏதோ பிதற்றினாள் டாக்டர். அவள் நிலையைக் கண்டு கண்ணீர் சிந்தினார். அதே வேளையில் சுருளியன் ஓடோடியும் வந்து கூறிய செய்தியைக் கேட்டபோது டாக்டரின் உள்ளம் ஒரு புறம் மகிழ்ச்சியையும் ஒரு புறம் கவலையையும் கொண்டு விளங்கியது.

சுகுமாரின் வீட்டிற்குள் டாக்டர் மோஸஸ் புகுந்து அவனை விரட்டினாராம் அவன் தான் அவருடைய அந்தரங்க நண்பரும் விரோதியும் என மோஸஸ் தெரிந்து கொண்டு விட்டார். அதன் காரணமாக அவனைத் தீர்த்துக் கட்டி விடலாம் என்று அங்குச் சென்றாராம். மனைவி அவள் தாய் வீடு சென்றிருந்தாள். ஆகவே தனித்திருந்த சுகுமாரை மோஸஸ் மிரட்டிக் கொண்டிருந்தபோது அங்கேஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டதாம். சுகுமாருடன் ஒரு பெண்ணும் சுடப்பட்டு இறந்து விட்டனராம். ஆனால் டாக்டர் மோஸஸ் எப்படியோ தப்பிக் கொண்டார். இந்தச் செய்தியைப் பல இடங்களில் பலவாறாகக் கேள்விப்பட்டுப் பின் தொகுத்து ஒழுங்காகக் கூறிவிட்டான் சுருளியன்.

அதேவேளையில் ஒரு அறையில் தீவிர சிந்தனையிலீடுபட்டிருந்தார் டாக்டர் மோஸஸ். அவருடைய உள்ளம் தன்னால் சுடப்பட்ட அப் பெண் மீதே லயித்திருந்தது. அவருக்கு அவளைப் பற்றிய சிந்தனையாகவே இருந்தது.

அவள் யார்? எப்படி அங்கு வந்தாள்? அழகிய உடலுடன் நிர்வாணமாகப் பார்க்கப் பயந்தரும் அழகுருவம். கண்கள் தீக்கோளங்கள் போல. எப்படி அவளால் தெருவழியே வர முடிந்தது? மோஸஸ் பயங்கர ஆராய்ச்சி எல்லாம் செய்தவர், அப்படிப் பெண்ணையோ ஆணையோ விஞ்ஞான சக்தியால் குறிப்பிட்ட எல்லைக்குள் நடமாட வைக்க முடியும் என்று தெரிந்தவர். ஆனால் அவள் சுகுமாரின் ஆளாக இருக்க முடியாது. அவளைக் கண்டபோது சுகுமாரே நடுங்கினானே. அப்படியானால் அவள் ???

ஊர்மக்களெல்லாம் சுகுமார் வீட்டு வாசலில் கூடி விட்டனர், அவன் தங்கை இறந்தது வியப்புக்குரிய செய்தியானாலும் மக்கள் பயந்து நடுங்கினர், அதே வேளை இப்படி ஒரு பெண் கொலை செய்யப்பட்டுக் கிடந்தது பொலிஸ் இலாகாவுக்கே அதிசயமாயிருந்தது. அழகிய பிணம் போலிருந்த அவள் உடலில் துப்பாக்கிக் காயம் பிடித்திருந்தது.

மயக்கம் தீர்ந்து எழுந்த கீதாவை மார்புடன் அணைத்தவாறே விடயத்தை அறிய முற்பட்டார் சிவகுமார், அவள் தான் கண்ட காட்சியைக் கூறினாள். அதாவது நிர்வாணப் பெண் ஒருத்தி ஆடி அசைந்து வந்ததைத் தான் கண்டு விட்டே தான் அப்படி மயங்கியதாகக் கூறினாள். அதே வேளையில் டாக்டருக்குப் போன் அழைப்பு வந்தது.

எதிர்ப்புறமிருந்து பொலிஸ்இன்ஸ்பெக்டர் அழைத்திருந்தார்.

''ஹலோ அருள் நாதன் பெரிய அதிசயமான விடயங்கள் எல்லாம் நடந்ததாக அறிந்தேன். உண்மைதானா?'' என்றார் டாக்டர்.

''ஆமாம் டாக்டர் உடனே வாருங்கள். பல விடயங்கள் உங்களிடமிருந்து நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.''

''ஆல் ரைட் இன்ஸ் பெக்டர்'' என்று கூறிப் போனை வைத்து விட்டுப் புறப்பட ஆயத்தமானார் சிவகுமார்.

பொலிஸ் நிலையத்தில் சிவகுமாரை வரவேற்று நடைபெற்ற விடயங்களைக் கூறிய அருள் நாதன் பொலிஸ் சுப்பிரிண்டன் தலைமையில் விசேட பொலிஸ் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவிருப்பதாகக் கூறினார். அத்துடன் டாக்டர் மோஸஸின் மோசடிகளை ஒழித்துக்கட்ட அவரை ஒத்துழைக்கும் படியும் வேண்டினார் இன்ஸ்பெக்டர்.

நமது தொடர்கதை

நிர்வாணப் பெண்ணுடைய பிரேதமும் சுகுமாரின் பிணமும் பொலிஸ் நிலையப்பரிசோதனை அறையில் வைக்கப்பட்டிருந்தது. அப் பெண் எப்படி இறந்தாள் என அறிய ஆவல் பட்டார் சிவகுமார். அவருடைய விருப்பப்படியே அழைத்துச் சென்றார் இன்ஸ்பெக்டர்.

அவளுடைய கண்களில் குறிதவறாமல் சூடு விழுந்திருக்கிறது. இரு கண்ணும் சிதைந்து முகம் விகாரமாய் காட்சியளித்தது. அந்த உடலில் துர்மணம் வீசிக்கொண்டிருந்தது. கண்களை இறுக மூடிக்கொண்டார்.

'இன்ஸ்பெக்டர்! டாக்டர் மோஸஸ் வெளிநாடு புறப்பட ஆயத்தமானாலும் ஆகிவிடுவார். உடனே புறப்படுங்கள் நான் இடம்காட்டுகிறேன்' என்றார் டாக்டர்.

ஆயுதந்தாங்கிய பொலீஸ் கோஷ்டியுடன் டாக்டர் சிவகுமாரும் இன்ஸ்பெக்டரும் புறப்பட்டனர். டாக்டர் ரஞ்சிதத்தின் மருத்துவ மனையை அடுத்த ஒரு பழைய காலக் கட்டிடத்திற்கு முன்பாக பொலீஸ் வண்டி வந்து நின்றதும் டாக்டர் ரஞ்சிதம் எட்டிப்பார்த்தாள். சிவகுமாரைக் கண்டதும் ரஞ்சிதம் சிரித்தவாறே கண்ணைக் காட்டினாள்.

உடனே பொலிசார் ரஞ்சிதத்தின் மருத்துவமனைக்குள்ளால் சென்று பின்புறமாகச் சுற்றி வந்து பழைய கட்டடத்திலுள் நுழைந்தனர். அங்கே பொலிசார் சென்றடைந்ததும் வீட்டினுள் ஏதோ பொருட்கள் இரைவதும், பின் வெடிப்பதுமாகச் சத்தம் கேட்டன. கதவை பலவந்தமாகத் திறந்து கொண்டு எல்லோரும் உள்ளே சென்றனர். உள்ளே டாக்டர் மோஸஸ் குற்றுயிரில் கிடந்தார். திராவகம் நிரம்பிய போத்தல்கள் சில வெடித்துச்சிதறியிருந்தன.

இன்ஸ்பெக்டரை அருகில் அழைத்து சிவகுமாரையும் வரும்படி அழைத்தார். கீதா எப்படிக் கொலை செய்யப்பட்டாள் என்ற விபரமடங்கிய ஒரு 'பைல்' மேசை லாச்சியிலிருப்பதாகக் கூறிவிட்டு நிர்வாணப் பெண்ணைப்பற்றிய பேச்செடுத்ததும் உயிர் அவர் உடலை விட்டுப் பிரிந்து விட்டது.

மேசை லாச்சியைத் திறந்து அவர் கூறிய 'பைல்' கட்டை எடுத்தார் இன்ஸ்பெக்டர். ஒவ்வொரு பெயர் குறிக்கப்பட்ட பைல்கள் அதனுள் இருந்தன. அத்தனையும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டன. ஆனால் உடனடியாகக் கீதா சம்பந்தப்பட்ட விடயத்தைப் படிக்கும்படி வேண்டினார் சிவகுமார்.

கீதா என்ற பெண்ணைக் கொலை செய்தால் ஐயாயிரம் ரூபா தருவதாகத் திருமதிசோமசுந்தரம்கூறியதும் நான் இணங்கவில்லை. உடனடியாக மூவாயிரம் ரூபா தந்து எது விதமான சந்தேகத்திற்கும் இடமின்றி அவளைக் கொன்று விட வேண்டும் என்று வேண்டினாள். அதற்கு உபாயமாகப் பாம்புவிஷத்தைப்பல்லினால் குத்தி எற்றினேன். அன்று அவளுக்கு ஏற்கனவே தேநீருடன தூக்கமாத்திரை கொடுக்கப்பட்டிருந்தது. ஆகவே அவள் பாம்பு கடித்து இறந்தது எனக் கதையும் கட்டி விடப்பட்டது. இவ்விடயம் டாக்டர் சிவகுமாருக்குத் தெரிந்து விட்டதாக நினைக்கிறேன்' என எழுதப்பட்டிருந்தது.

சிவகுமாரை இன்ஸ்பெக்டர் பார்த்து சிரித்தார். ஏன் டாக்டர் சிரிக்கிறீர்கள்' என்றார் இன்ஸ்பெக்டர்.

'படித்த மனிதர்களும் சில வேளை முட்டாள்களாகி விடுவதுண்டல்லவா?'

'ஆமாம் யானையும் அடி சறுக்கும் என்று கூறுவார்களே அதுபோல' என்றார் இன்ஸ்பெக்டர்.

'அதே போன்று நடந்து கொண்டார் டாக்டர் மோஸஸ். பாம்பு விஷம் ஏற்றப்பட்டது நித்திரையில் அதுவும் தூக்க மருந்து கொடுக்கப்பட்ட பின்பு. அங்கே அவர்கள் செய்த தவறு கீதா உயிர் பிழைக்க முடிந்தது' என்றார்.

'வாட்! வாட் யூ சே டாக்டர்?' என்று ஆச்சரியப்பட்டார் இன்ஸ்பெக்டர்.

'ஆமாம் இன்ஸ்பெக்டர் இவர்களுடைய திட்டம் எனக்கு முன்பே தெரிந்து விட்டது. டாக்டர் மோஸஸ் தன் நண்பனான சுகுமாருக்குக் கீதாவைக் கொலை செய்யும் விடயம் பற்றித் தொலைபேசியில் கூறுகையில் ரஞ்சிதம் கேட்டிருக்கிறாள். உடனே எனக்கு அறிவித்தாள். நான் கீதாவைக்காப்பாற்றி விட்டேன்.'

'டாக்டர்' என்று அவர் கரங்களைப்பற்றினார் அருள் நாதன். 'நான் சில உண்மைகளை உங்களிடம் கூறப் போகிறேன். ஆனால் நான் செய்த உதவிகளுக்கு நீங்கள் எனக்கு உதவி செய்வதாக வாக்களிக்க வேண்டும் இன்ஸ்பெக்டர்' என்றார் சிவகுமார்.

உங்களுக்கு இல்லாத உதவியா டாக்டர். நீங்கள் பொலீஸ் இலாகாவுக்கே நன்மதிப்புத் தேடித் தந்திருக்கிறீர்கள். உங்களுக்கு வெகுமதி கூடக் கிடைக்கும் டாக்டர்.'

'வெகுமதி வேண்டாம் இன்ஸ்பெக்டர், தொல்லை ஏற்படாதிருந்தால் போதும். நான்தான் கீதாவைக் காப்பற்றினேன்" என்று டாக்டர் கூறியபோது இன்ஸ்பெக்டர் திகைத்து விட்டார்.




# தங்கு மடம்

### "சுமைதாங்கி"

இந்தப் பாழாய்ப்போன சினிமாப்படம் வந்தாலும் வந்தது என் உடம்பெல்லாம் ஒரே விளம்பரந்தான் போங்க. அன்றும் பாருங்க என்மீது யாரோ வழக்கம்போல் ஒரு படத்தின் போஸ்ரரை ஒட்டிவிட்டுப்போட்டாங்க. அப்புறம் பாருங்க, வழக்கம் போல், அந்த மடத்திலே வந்து சோம்பல் முறிக்கிற சாமியார்களில் ஒருவர் அதைப் பார்த்திட்டாரு. அதைப் பார்த்ததிலேயிருந்து அவருக்கு ஒரே குஷிதான் போங்க. அந்தப்படத்தை எப்படியும் பார்த்திட வேணுமென்று ஆசாமியாருக்கு மனதிலே சபலந் தட்டியிருந்தது.

இத்தனைக்கும் அந்தப் போஸ்ரரில் அரை நிர்வாணப் படம் கூட இல்லை. அவருடைய கூட்டாளிச் சாமியார் வந்தவுடன் தன் ஆசையைத் தெரிவித்தார். அப்புறம் பாருங்க இருவரும் சேர்ந்து போய்ப் படத்தைப் பார்த்துட்டு வந்து இந்த மடத்திலேயிருந்து தலையிலே அடித்துக்கொண்டாங்க...

'...ஒரே ஏமாற்றம். நினைத்தது ஒண்ணு. நடந்தது இன்னொன்று............' என்று ஏதேதோவெல்லாம் புலம்பினாங்க. பாவங்க, படத்தின் பெயரைப்பார்த்து ஏமாந்துதான் படத்திற்குப் போனாங்க, என்பது பின்னடி எனக்குப் புரிஞ்சு போச்சு. அந்தப்படத்தின் பெயர் கூட... வந்து...வந்து ...நாசமாப் போச்சுப் போங்க இந்த எழவு ஞாபக மறதி வந்தாலும் வந்தது என்மேல் ஒட்டுற விளம்பரங்கள் கூட ஞாபகத்திலே நிற்க மறுக்கிறது. கொஞ்சம் பொறுங்க சொல்றன்.

பெயரைப்பார்த்துப் பின் வருமாறு பேசிக்கிட்டாங்க, அதாவது 'இதுவரை 'நானார்?' என்பது எனக்கே தெரியலே. இந்ததேகத்தை நான் என்று சொல்ல முடியாது. இது என்னுடைய தேகம், இது என்னுடைய அது, இது, மயிர், மண்ணுங்கட்டி, என்றெல்லாம் சொல்லுவாங்களே தவிர யாரும் 'நானார்?' என்ற கேள்விக்குச் சுலபமாக விடையைக்காணமுடியாது. எதற்கும் இந்தப்படத்தைப் பார்த்தால் புரியும் வாங்க.' என்று போனவங்க திரும்பி வந்து தலையிலே அடித்துக்கிட்டதற்கு காரணம் 'நான் யார் தெரியுமா?' என்ற கேள்விக்கும் அந்தப் படத்திற்கும் சம்பந்தமே இல்லையாம். அது ஏதோ நல்ல துப்பறியும் கதையாம். போயும் போயும் சாமிமாருக்கு அங்கே என்னவேலை? 'காலம் கெட்டுப்போச்சு' என்று நான் சும்மா சொல்லலே.

ஒரு சமயம் பாருங்க, என் பெயரை வைத்துக் கூட ஒரு படம் பிடிச்சாங்க, ஆனால் பாருங்க ஒரு இடத்தில் கூட சுமைதாங்கி வரல்லீங்க.

விஷயம் அப்படியாயிருக்கு! பெயரைப்பார்த்து ஏமாந்த ஆசாமிமாருக்கு என் அனுதாபம் உரித்தாகுக. அடட, கதை போற போக்கில இந்த ஆசாமிகளைப் பற்றி கூற மறந்து போனேனே. இவங்களெல்லாம் இப்படிச் சாமிமாராய் மாறியதற்கு காரணமே 'நானார்?' என்ற கேள்விக்குச்சரியான விடை

(9-ம் பக்கம் பார்க்க)

# புதிய சமாதான நீதவான்

கல்முனையைச் சேர்ந்த திரு. பொன்னையா விநாயகமூர்த்தி கந்தையா அவர்கள், மட்டக்களப்பு மாவட்டத்து சமாதான நீதவானாக கௌரவ நீதி அமைச்சரால் நியமிக்கப் பட்டுள்ளளார். மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. எஸ். யோகநாதன் அவர்கள் முன்னிலையில் (1-7-68) தமது பதவிக்கான சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.



—திரு. கந்தையா அவர்கள் ஒரு பிரசித்த நொத்தாரிஸ் ஆவார். தமிழில் பாண்டித்தியம்—பெற்று நிறைந்த அறிவோடு விளங்கும் இவர், சிறந்த சமூக சேவையாளரும்— தர்மகர்த்தாவும் ஆவார். பொது நலத் தொண்டில் மிகுந்த அக்கறை கொண்ட இவர், பொதுமக்களோடு எவ்வித பேதமுமின்றி சோதர வாஞ்சையோடும்—சமாதானப் பிடிப்போடும் பழகுந்தன்மையுடையவர்.

—அன்பினாலும், நேர்மைத் திறனாலும் மக்கள் தம் நல்லபிமானம் பெற்ற திரு. கந்தையா அவர்கள், 15-11-65 முதல் கல்முனைப் பட்டின சபையின் ஆட்சிக்குட் பட்ட பிரதேசத்துக்கான வீட்டு வாடகைக் கட்டுப்பாட்டுச்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில் நடைபெற்றது

# பொதுமேடையா? தமிழ் காங்கிரஸ்மேடையா?

## 16 உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் கூட்டத்தைப் பகிஷ்கரித்தனர்

## காங்கிரஸ் குண்டர்களால் அப்பாவி வன்னியன் பந்தாடப்பட்ட பரிதாபம்!

**தமிழ் காங்கிரஸ் தமிழ் பேசும் மக்களை எப்படி யெல்லாம்ஏமாற்றி வருகிறது என்பதற்கு இம்மாதம் 8 ம் திகதி வவுனியாவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஓர் நல்ல எடுத்துக் காட்டாக விளங்குகிறது. மாவட்ட சபை பற்றிய கருத்தரங்கு என்ற பெயரில் பொது மேடை நடைபெறப் போகிறதென பத்திரிகைகளில் புரளிச் செய்திகள் வெளிவந்தன.**

**ஆனல் நடைபெற்றது பொதுமேடையல்ல; காங்கிரஸ் மேடையே. வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 17 உள்ளூராட்சி மன்றத் தலைவர்களும் கலந்து கொண்டதாக தினசரிகள் கூறின. ஆனல் ஒரே யொரு தமிழ் காங்கிரஸ் ஆதரவாளரான உள்ளூர் ஆட்சி மன்ற தலைவரே கலந்து கொண்டார்.**

**கூட்டத்தில் அப்பாவியான பண்டார வன்னியன் பரம்பரையில் வந்த ஓர் தமிழன் காங்கிரஸ் குண்டர்களால் பந்தாடப் பட்டான். இதைப் பார்த்தபடி புன்னகை தவழ இருந்தாராம் வவுனியா எம். பி-**

**பொங்கி எழுந்த வன்னித்தமிழர்கள் பொன்னம்பலத்தை பேசவிடாது தடுத்தனர் கூட்டம் குழம்பியது!**

**தமிழரசுத் தலைவர்கள் வெருக்கும் இப்பொதுமேடைக்கு வருப்படி அழைப்பு அனுப்பப்படவில்லை.**

**தமிழ் காங்கிரஸ் கட்சியினர் வவுனியாவில் நடத்திய தில்லு முல்லுகளையும் உள்ளாந்தரங்களையும் இங்கு தருகிறர் நமது வவுனியா நிருபர். படியுங்கள்!**

தமிழ் மக்களை தமிழ்காங்கிரஸ் எவ்விதம் ஏமாற்றுகிறது என்பதற்கு எடுத்துக் காட்டு வவுனியா பொது மேடை ஆகும் இப் பொது மேடையை 17 உள்ளூர் ஆட்சி மன்றங்கள் ஒழுங்கு செய்ததாகப் பத்திரிகைச் செய்திகள் கூறின. ஆனல் நடந்ததென்ன?

முன்னேடியாக இக் கூட்டத்தை திறம்பட நடாத்த வவுனியா பா. உறுப்பினர் இரண்டு கூட்டங்களைக் கூட்டினர். இரண்டாவது கூட்டம் 5-7-68 அன்று மாலை 2 மணிக்கு நியூ இந்திரா தியேட்டரில் வவுனியா பா. உறுப்பினர் தலைமையில் நடை பெற்றது. இக் கூட்டத்துக்கு 17 உள்ளூர் ஆட்சி மன்றத் தலைவர்களோ அங்கத்தவர்களோ அழைக்கப் படவில்லை. தமிழ் காங்கிரஸ் ஆதரவாளர்களான வவுனியாப் பட்டின சபைத் தலைவர், அங்கத்தவர்களும், ஏனைய தமிழ் காங்கிரஸ் ஆதரவாளர்களான வவுனியாப் பட்டின சபைத் தலைவர், அங்கத்தவர் களும், ஏனைய தமிழ் காங்கிரஸ் வவுனியாப் பிரமுகர்களும் வவுனியாப் பா. உறுப்பினரின் அரசசேவை கடிதஉறை உதவியுடன் அழைக்கப்பட்டனர்.

மாவட்ட சபை எதிர்ப்பு பிரசாரக் கூட்டத்தை எவ்விதம் வெற்றிகரமாக நடத்துவது என்பதுபற்றி ஆராய வலிந்து அழைப்பு அனுப்பியும் உண்மை உணர்ந்த பலர் கூட்டத்துக்குச் சமூகம் கொடுக்கவில்லை. மாவட்ட சபை எதிர்ப்புக் கூட்டத்திலே பல வன்னியர் கேள்விக்கணை தொடுக்க இருக்கிறர்கள் என்ற செய்தியை பட்டின சபைத் தலைவர் வெளியிட்டார். அதைச் சமாளிக்கும் பொறுப்பு வவுனியாவில் உள்ள ஒரு யாழ்ப்பாணத்து இளைஞன் (பா. உறுப்பினரின் கையாள்) ஏற்றுக்கொண்டார்.

### இறக்குமதியான குண்டர்கள்

பின்னர் பொது மேடைச் சுவர் ஒட்டிகள் எங்கும் அடுத்த நாள் ஒட்டப்பட்டன. 'தமிழ் காங்கிரசின் மாவட்ட சபை எதிர்ப்புப் பூரண விளக்கம்' என கொட்டை எழுத்தில் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகளை இன்றும் வவனியா எங்கும் காணலாம்.

எட்டாந் திகதி வந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து மோட்டார் வாகனங்கள் (வான், லொறி) குறிப்பிட்ட சில கிராமங்களைச் சேர்ந்த குண்டர்களை கொண்டுவந்து வவனியாவில் சேர்த்தது. பா. உறுப்பினரின் பெயரில் இல்லாத ஆனல் அவரது பெற்றேல் நிலையம் எனக் கூறப்படும் நிலையம் தமிழ் காங்கிரஸ் வர்ணக் காகிதங்களாலும், கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டன.

### 200 பேர்

ஆச்சரியப்படாதீர்கள் பொது மேடை எனப் பெயர் சூட்டி பொது மக்கள் கண்களில் மண் தூவ முயன்ற அதேமேடை தமிழ் காங்கிரஸ் வர்ணக் காகிதங்களாலும் தமிழ் காங்கிரஸ் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. சுமார் இருநூறு பேர்வரை வவனியா பொது மக்கள் கூட்டம் பார்க்க வந்திருந்தனர்.

திருவாளர் பொன்னம்பலம் வாடிவீட்டிலிருந்து வந்து இறங்கினர். வான்; மோட்டார் வண்டிகள் மூலம் யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப்பட்ட நூற்றுக்கும் அதிகமான குண்டர்களும் அவரைத் தொடர்ந்து கொண்டுவந்து இறக்கப்பட்டனர்.

### இதுவா பொதுமேடை?

கூட்டம் ஆரம்பமானது. வவனியாவில் உள்ள பிரசித்திபெற்ற ஓர் அரசாங்கப் பாடசாலைச் சங்கீத ஆசிரியரால் பழக்கப்பட்ட மாணவிகள் தமிழ் காங்கிரசின் 'அகிலமும் புகழ் உயர்', என்ற கீதத்தைப் பாடினர்கள். பாவம் சங்கீத ஆசிரியரும் மேடையில் நின்று தம் கடமையை நிறைவேற்றினர். பாடிய பெண்களில் இருவர் முன் கூறிய பாடசாலை ஆசிரியர் ஒருவரின் புத்திரிகளாம். என்னசெய்யலாம்? பட்டின சபைத் தலைவர் பா. உறுப்பினரின் பெயரைச் சொல்லி ஆசிரியரை மடக்கி விட்டார்போலும்! பொதுமேடை அமைப்பதாக பகிரங்கப்படுத்திய வவனியா நகர பிதா காங்கிரஸ் கீதம் பாட ஒழுங்கு செய்தார்—காங்கிரஸ் மேடையில். இதுவா பொது மேடை?

### 16 பேர் எங்கே?

வவனியா பட்டின சபைத் தலைவரைத் தவிர அங்கு மேடையில் இருந்த பேச்சு நிகழ்த்திய உள்ளூர் ஆட்சி மன்றத்தின் ஒரே தலைவர் பருத்தித்துறைப் பட்டின சபைத் தலைவரே ஆவார். பதவி இழந்த ஒரு பட்டினசபைத் தலைவரான ஒரு காங்கிரஸ் பிரமுகரும் அங்கு காணப்பட்டார். ஆனல் ஏனைய 16 உள்ளூர் ஆட்சி மன்றத் தலைவர்களையோ, அங்கத்தவர்களையோ மேடையில் காணவில்லை.

கூட்டத்திலே பேசிய பிரமுகர்களில் பலரும் முக்கியமாக தமது வழக்கமான, சத்தியாக்கிரகம், திருமலை யாத்திரை, தளபதி அமிர்தலிங்கம் என்ற கிண்டல் பேச்சுக்களையே பேசினர். வன்னிப் பொது மக்கள் இதற்கு ஆட்சேபம் தெரிவித்து மாவட்டசபை பற்றிப் பேசுகிறீர்களா ஒரு கட்சியைத் திட்ட வந்தீர்களா என பல கோணங்களிலிருந்தும் கேட்டனர். உடனே கொண்டுவரப்பட்ட குண்டர் படை தடுக்கி விழுந்து அங்கும் இங்கும் ஓடி சண்டித்தனம் செய்ய முற்பட்டது.

### பழைய செருப்பு!

பொதுமேடை அமைக்கப் போவதாக அறிக்கைவிட்ட வவுனியா நகர பிதா தமிழரசுக்கட்சி வேட்பாளர் வவனியாவில் பா. தேர்தலில் தோல்வியுற்றதைக் குறிப்பிட்டு விட்டு அடுத்த முறையும் தமிழரசாருக்கு பழைய செருப்புத்தான் கொடுப்போம் எனப் பகிரங்கமாக மேடையில்-பொது மேடை அல்ல—காங்கிரஸ் மேடையில் கூறினர்.

அடுத்த முறை வட பகுதியில் ஒரு பாராளுமன்றத்

(8-ம் பக்கம் பார்க்க)




இ. தி. செல்வம்,
அக்கரைப்பற்று

கே; இலங்கையில் கடைசியாக நடந்த பொதுத் தேர்தலில் அதிகப்படியான வாக்குகளைப் பெற்ற மூவர் எத் தொகுதியைச் சேர்ந்தவர்கள்? அவர்களின் பெயர் என்ன? நிரைப் படுத்திக் கூறுங்கள்.

ப: முதலாவதாக கொழும்பு மத்திய தொகுதியில் பளீல் கபூர் 26,894 அதிகப்படியான வாக்குகளும், இரண்டாவதாக கொழும்பு மத்திய தொகுதியில் திரு. பிரேமதாசா, 22960 அதிகப்படி வாக்குகளும், மூன்ருவதாக மட்டக்களப்பில் திரு. செ. இராசதுரை 17,013 அதிகப்டி வாக்குகளும் முறையே பெற்றுள்ளனர்.

ஃ

மாணவர்கள்,
மண்டைத்தீவு

கே: ஆலயப் பிரவேசம் பற்றி உங்கள் அபிப்பிராயத்தைச் சிறிது தெரிவிக்கின்றீர்களா?

ப: ஆண்டவனை வணங்கவென ஆலயத்துள் பிரவேசிக்க விரும்புவோருக்கும் அவ்வுரிமையிருக்க வேண்டுமென்பதே எப்போதும் எனது கொள்கை!

ஆர். பாலகிருஷ்ணன்
மாத்தளை

கே: தமிழக தி. மு. கழகத்தை நான் வெறுக்கிறேன். நீங்கள்...?

ப: நான் உங்களை வெறுக்கமாட்டேன்!

ஃ

சதாசிவம் யோகராசா
கொழும்பு-13

கே: திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஐ. நா. சபையில் இருந்து திரும்பியதும் அவருக்கு போடப்பட்ட 65 தங்கப் பவுண் மாலையை கொண்டு ஒருகைத்தொழில் நிறுவனம் நிறுவப் போவதாகக் கூறினரே, இதுவரை மாலையும் இல்லை, இன்னும் எங்கே அந்த கைத் தொழில் நிறுவனம்?

ப: தயவுசெய்து என்னிடம் இப்படிக் கேட்டது போல திரு. பொன்னம்பலத்திடம் கேட்காதீர்கள் அப்புறம்— 'பொத்தடா வாய்!'' தான்!

ஃ

சொல்லின் செல்வன்
கொட்டடி

கே: ஒரு பலத்தையே நம்பி இனியும் இரண்டு சிவாக்களும் இருக்கலாமா?

ப: ஒரு பலத்தை நம்பாமல் சுயபலத்தையே இப்போது நம்புகிறர்களாம் அவர்களிருவரும்!

கே: மாவட்ட சபைப் பிரச்சனையைப் பிரதமர் கைவிட்டு விட்டாராமே உண்மையா?

ப: அப்படி விட்டுவிட்டதாக அவர் இன்னும் அறிவிக்கவில்லை.

க. யோகநாதன்
கோப்பாய்

கே: 1965 பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு முதற் பிரதிநிதி திரு. செ. இராசதுரை அவர்கள் இரண்டாவது பிரதிநிதி திரு. அப்துல் லத்திப் சின்னலெவ்வை அவர்களை எவ்வளவு அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்ருர்?

ப: 17,013 வாக்குகளால்.

ஃ

விமலேதர் மசூரியன்,
பதுளை

கே: வழியிலே போகும் போது கையைப் பிடித்து இழுக்கிருள் ஒருத்தி. இதற்கு என்ன செய்யலாம்?

ப: அப்பெண்ணை அங்கொடை மனநோய் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடுங்கள்! ஹிஸ்தீரியா நோயாக இருக்கலாம்!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சமஷ்டிக் கோரிக்கை கைவிடப்பட வேண்டியதா?

## ஒற்றையாட்சியால் தமிழ் பேசும் இனத்துக்கு வந்துள்ள கேடுகள்!

இலங்கை அரசியலில் அண்மைக் காலமாக ஒரு புதிய கூக்குரல் தென்னிலங்கையில் கேட்கத்தொடங்கியிருக்கிறது. தமிழரசுக்கட்சி தனது சமஷ்டிக் கோரிக்கையைக் கை விட்டு விட வேண்டுமென்றும், ஒற்றையாட்சி அமைப்பு முறையையும், சிங்களம் மட்டும் சட்டத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், சிலர் பயமுறுத்தியும் சிலர் நயமாகவும் கருத்து வெளியிட்டு வருகிருர்கள். பாராளுமன்றத்திலும், மூதவையிலும் கூட இக்கருத்துக்கள் தாராளமாகக் கேட்டன.

இலங்கையின் ஐக்கியத்துக்கும், ஒருமைப்பாட்டுக்கும், தமிழரசுக்கட்சி, இந்த ''தியாகங்களை''ச் செய்ய வேண்டுமென வேண்டுகோள்கள் விடப்பட்டு வருகின்றன. தினசரிப் பத்திரிகைகளும் சமஷ்டிக் கோரிக்கையைப் பற்றிப் புனராலோசனை செய்யும்படி தமிழரசுக் கட்சிக்கு ஆலோசனை கூறி வருகின்றன.

தமிழ் மக்களின் நலன் பற்றி இதுவரை கனவில்கூட நினைத்தும் பார்க்காமல், தன் வாழ்வை வளர்த்துக் கொண்ட சுதந்திரக் கட்சியின் முன்னைய ஆதரவாளரான ஓர் தமிழ்ப் பிரமுகர் டெயிலிமிறர் ஏட்டுக்கு எழுதியுள்ள நீண்ட கட்டுரை ஒன்றில் தமிழ் மக்கள் ''தேசிய கட்சிகளில்'' சேர முன் வர வேண்டும் என்று ''புத்திமதி'' கூறியுள்ளார்.

தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் இவர்கள் கூறும் ஆலோசனைகளையும் புத்திமதிகளையும் பார்க்கும் போது நமக்கு அழுவதா சிரிப்பதா என்று விளங்கவில்லை.

### சிங்களக் கட்சிகளின் நோக்கம்

இந்த நாட்டில் சிறுபான்மை மக்களின் உரிமைகளையும், சலுகைகளையும் பறி

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

த்து, அவர்களின் பிரதேசங்களில் சிங்கள மக்களைப் பெருமளவில் கொண்டு சென்று குடியேற்றுவதன் மூலம் இனத்தையும் மொழியையும் அழித்து, ஓர் பௌத்த சிங்கள இராச்சியத்தை உருவாக்கும் மூலாதார நோக்கத்தை அடி மனதில் கொண்டு இயங்கி வருகின்றன இந்நாட்டிலுள்ள சிங்களக் கட்சிகள். சில கட்சிகள் இதைப் பகிரங்கமாகக் கூறுகின்றன. வேறுசில உள்ளத்தில் இந்த எண்ணம் இருந்தாலும் வெளிக்கு நல்ல பிள்ளைக்கு நடிக்கின்கின்றன. ஆக எல்லாச் சிங்களக் கட்சிகளின் நோக்கமும் ஒன்று தான்.

மாவட்டசபையை எதிர்த்து நாட்டில் நடத்தப்பட்ட பிரசாரக் கூட்டங்களில், சிங்கள அரசியற் தலைவர்களும், புத்தரின் பொன் மொழியைப் பின்பற்றுவதாகக் கூறும் மாநாயக தேரோக்களும், ஹேமா பசநாயகா போன்றவர்களும் தெரிவித்துள்ள கருத்துக்களை அரித்துச் சலித்துப் பார்க்கும்போது இந்த ஒரே நோக்கம் தான் காணப்படுகிறது.

### தமிழினத்தை வேரறுக்கும் கருத்துக்கள்

அதாவது, வடக்கிலிருந்து தெற்குப் போக இலங்கை முழுவதும் சிங்களவர்களுக்கு மட்டுமே உரிய நாடு. வடக்கு, கிழக்குப் பகுதிகள் கூட தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமல்ல. அவையும் சிங்கள மக்களின் பிரதேசம் தான். இவ்விரண்டு மாகாணங்களிலும் பெருமளவில் சிங்களவர்களைக் குடியேற்றித் தமிழ் மக்களின் தனித் தன்மையை அழித்துவிட வேண்டும். தமிழ் மக்கள் இந்நாட்டில் தொடர்ந்து வாழ வேண்டுமென்ருல், அவர்கள் சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக் கொண்டு சிங்கள மக்களுக்கு அடிமைகளாக வாழ வேண்டும்—அல்லது சிங்கள மக்களுடன் ஐக்கியமாகி இரண்டறக் கலந்துவிட வேண்டும் என்பன போன்ற கருத்துக்களே சிங்கள மக்களிடையே விதைக்கப்பட்டு வருகின்றன.

இக்கருத்துக்களை விதைத்து வருபவர்கள் தான் தமிழரசுக்கட்சியின் சமஷ்டிக் கோரிக்கையே நாட்டின் இன ஒற்றுமைக்குப் பாதகமாக இருந்து வருவதாகவும், சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட்டால் இன ஒற்றுமை ஏற்பட்டு விடுமென்றும் கூறி வருகிருர்கள்.

### ஒரே தடைக்கல்

தமிழினத்தை விழுங்கி ஏப்பமிட நினைக்கும் சிங்கள வகுப்பு வாதிகளுக்கு ஓர் தடைக்கல்லாக இன்று இருப்பது தமிழரசுக்கட்சி. தமிழ் மக்களை வாழ வைக்கக் கூடிய நல்லதொரு படைக்கலமாக சமஷ்டிக் கொள்கையைத் தன்னிடத்தே கொண்டு, தனிச் சிங்களத்தின் வெறியாட்டத்தை எதிர்த்து நிற்கும் ஒரே கட்சி தமிழரசுக் கட்சிதான்.

எனவேதான் நயமாகவோ பயமாகவோ, தமிழரசுக் கட்சியை பின்வாங்க வைத்துவிட்டால், பின்னர் இந்நாட்டில் சிங்கள ஏகாதிபத்தியத்தை உருவாக்குவதில் தடை ஏதும் இருக்காது என்பதுதான் சிங்களக் கட்சித் தலைவர்களின் நோக்கமாகும்.

### ஜீ. ஜீ. பற்றி அக்கறையில்லை

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் கொள்கை

(7-ம் பக்கம் பார்க்க)

---

## எண்ணம்

### தமிழ் ஐக்கியத்தின் பெயரால் ஒரு வேண்டுகோள்!

தமிழ் பேசும் மக்களின் ஐக்கியத்திலும், கட்டுப்பாட்டிலும் நம்பிக்கையுடையவர்களுக்கு மாவிட்டபுரத்தில் நடைபெறும் சம்பவங்கள் வேதனையையும், வெட்கத்தையும் ஆருத துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஆலயப் பிரவேச இயக்கத்தினரும் சரி, ஆலயப் பிரவேச எதிர்ப்பாளரும் சரி, தமிழ் பேசும் மக்களை இன்று எதிர் நோக்கியிருக்கும் மிகப்பயங்கரமான ஆபத்துக்களை சிறிது எண்ணிப்பார்த்திருப்பார்களேயானுல், தமிழினம் தனக்குள்ளாக மோதிக் கொண்டு அழிகிறது என்று தென்னிலங்கையில் சிங்களவர்கள் கேலி பேசுமளவுக்கு பிரச்சினையை வளரவிட்டிருக்க முடியாது.

மாவிட்டபுரத்தில் நடக்கும் சிறு சம்பவங்களைப் பெரிதுபடுத்தி வெளியிடுவதில் இந்நாட்டு தமிழ், சிங்கள, ஆங்கில தினசரிகள் அளவுக்கதிகமான முக்கியத்துவம் கொடுத்து வருவதையும் இங்கு நாம் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இதற்குக் காரணம், தமிழினம் பிளவுபட்டு தமக்குள் மோதிக்கொள்வதாக சிங்கள மக்களுக்கும் வெளியுலகுக்கும் வெளிச்சம்போட்டு காட்டுவதே. இவற்றைப் பார்க்கும் போது தமிழனுகப் பிறந்த ஒவ்வொருவனும் இரத்தக்கண்ணீர் வடிக்காமல் இருக்க முடியாது.

தீண்டாமை தமிழினத்தின் தீராத சாபக்கேடு என்பதை நாம் மறுப்பதற்கில்லை. தீண்டாமையொழிக்கப்பட வேண்டும்; தமிழினம் ஏற்றத் தாழ்வற்ற ஒரே இனமாக உருவாக வேண்டும் என்ற இலட்சியத்துக்காக நாம் நீண்டகாலமாகவே உழைத்து வருகிறேம்.

தமிழினத்திலுள்ள நல்லவர்களும் கற்றறிவாளர்களும், தீண்டாமை என்னும் மூடக் கொள்கையை அகற்ற முயன்று வருகின்றனர். இத்துறையில் கோப்பாய்க் கோமான் அமரர் வன்னியசிங்கம் ஆற்றிய அரும்பணி சொல்லுந்தரமன்று. அதே போல திருமலைச் செல்வர் அமரர் இராஜவரோதயம் அவர்களின் முயற்சியினுல் தான் சமூக ஏற்றத்தாழ்வுகள் தடைச் சட்டமே உருவாகியது.

தீண்டாமை இன்று நேற்று ஏற்பட்டுவிட்ட ஓர் தீமையல்ல; பரம்பரை பரம்பரையாக இரத்தத்தோடு இரத்தமாக கலந்து சமூக அமைப்பிலும் ஒன்றிவிட்ட ஓர் தீமையாகும். ஆகவே அத்தீமையை அகற்றும் போது, தமிழினத்தின் ஐக்கியம் பிளவுபட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியமானது.

உடலில் ஏற்பட்டிருக்கும் கட்டியை அகற்ற கத்தி வைக்க வேண்டியது அவசியம் தான். ஆனுல் அக்கட்டி பழுக்கும்வரை காத்திருக்க வேண்டும். கத்தி வைக்கும்போது உயிருக்கு ஆபத்தில்லாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தமிழினத்தில் வேரோடிவிட்டிருக்கும் தீண்டாமைஅமைதிப் புரட்சி மூலம் மெல்ல மெல்ல அழிந்து வருவதை யாரும் மறுக்க முடியாது. 20 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்த நிலை இன்று கிடையாது. இதை எல்லோரும் ஒப்புக்கொள்ளவே செய்வர். வாலிபர்கள், படித்தவர்கள் மத்தியில் நாளடைவில் தீண்டாமையுணர்வு அழிந்தொழிந்து வருகிறது. இதே போக்கில் விட்டிருந்தால் மாறிவரும் காலச் சுழற்சியில் தீண்டாமைப் பேயை ஒழித்துக்கட்ட நீண்ட காலம் தேவைப்பட்டிருக்காது.

ஆனுல் அமைதியான முறையில், தமிழினத்தின் ஐக்கியத்துக்கு ஊறு ஏற்படாத வகையில் தீண்டாமை யொழிந்து வருவது சீனசார்பு கம்யூனிஸ்டுகளுக்கு பிடிக்கவில்லை. தீண்டாமையை ஒழியவிடாது கட்டிக் காத்து வந்தால்தான் சிறுபான்மைத் தமிழர்மத்தியில் தங்களுக்கு அற்ப சொற்ப செல்வாக்காவது இருக்கும் என்பது கம்யூனிஸ்டுகளுக்கு தெரியும். எனவே பிரச்சினைக்குள் புகுந்து குட்டை குழப்ப ஆரம்பித்தனர். தீண்டாமையை ஒழிக்க பலாத்காரத்திலிறங்குமாறு சிறுபான்மைத் தமிழர்களைத் தூண்டியும்விட்டனர். இதன் பின்னரே பிரச்சினை சிக்கலடைந்தது.

பலாத்காரத்தை நாம் எப்பொழுதுமே கண்டித்து வந்திருக்கிறேம். உயர் சாதித் தமிழர்கள் என்று கூறப்படுவோரும் சரி, சிறுபான்மைத் தமிழர்கள் என்று கூறப்படுவோரும் சரி, பலாத்காரத்தால் தீண்டாமைப் பிரச்சினையை ஒரு போதும் தீர்த்துக்கொள்ள முடியவே முடியாது. தீண்டாமை யொழிப்புக்கு ஒரே வழி-நிரந்தரமான வழி-மனமாற்றம் ஒன்றுதான். மனமாற்றம் மூலம் தீண்டாமை யொழிக்கப்படும்போது தமிழினத்தின் ஐக்கியத்துக்கும் பாதகம் ஏற்படாது.

அதுவும் ஆலயப் பிரவேசத்தைப் பொறுத்தவரை முழுக்க முழுக்க மனமாற்றத்தின் அடிப்படையிலேயே பிரச்சினையை அணுக வேண்டும். ஏனெனில் கணக்குக் கெட்டாத காலம் முதற்கொண்டே சிறுபான்மைத் தமிழர்களுக்கு ஆலயத்துட் சென்று தரிசனம் செய்யும் உரிமை மறுக்கப்பட்டு வந்திருக்கிறது. சிறுபான்மைத் தமிழர்களை கோயிலுக்குள் அனுமதிப்பது வேத, ஆகமங்களுக்கு முரண்பட்டது என்று அப்பழுக்கற்று நம்பும் பழைமைவாதிகளும் இன்னும் இந்துக்களிடையே இருக்கிருர்கள்.

ஆகவே அப்படிப்பட்டவர்களுக்கும், உண்மைகளை எடுத்துக் கூறி மனமாற்றத்தின் மூலமே ஆலயப் பிரவேசம் நடைபெற வேண்டும் என்பதே நமது தீர்க்கமான கருத்தாகும். அத்தியாவசியமேற்படும் போது பாதுகாப்பளிக்க சமூக ஏற்றத் தாழ்வுகள் தடைச் சட்டமும் துணையாக இருக்கிறது. ஆக, ஆலயப்பிரவேச பிரச்சினையை பலாத்கார அடிப்படையில் அணுகுவதை வன்மையாக கண்டிக்கிறேம்.

மனமாற்றத்தினுல்தான், நல்லூர் கந்தசாமி கோயில் போன்ற பல ஆலயங்களில் தீண்டாமை யொழிக்கப்பட்டுள்ளன வென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மாவிட்டபுரத்தில் ஆலயப் பிரவேச உரிமை கோரி சிறுபான்மைத் தமிழர்கள் சத்தியாக்கிரகம் மேற்கொண்டதை பலாத்கார நடவடிக்கையென்று நாம் குறிப்பிடவில்லை. சத்தியாக்கிரகம் மனமாற்றம் ஏற்படுத்துவதற்கு ஓர் சிறந்த வழியென்பதையும் நாம் மறுக்கவில்லை. ஆனுல் கோயில் திருவிழாக்கள் தடைப்படும்படியான முறையில் சத்தியாக்கிரகம் நடத்த முற்பட்டதை நாம் கண்டிக்காமலிருக்க முடியாது. இதனுல் சமய நம்பிக்கையுள்ள ஆலயப்பிரவேசத்துக்கு ஆதரவான இந்துக்களின் வெறுப்புக்கும் அவர்கள் ஆளாக நேரிட்டிருக்கலாம்.

அதே நேரத்தில் ஆலயப்பிரவேசப் பிரச்சினையில், கடவுள் நம்பிக்கையற்ற கம்யூனிஸ்டுகளும், மார்க்சீயவாதிகளும் தலையிடுவதை நாம் வன்மையாக கண்டிக்கிறேம். கம்யூனிஸ்டுகள் இதில் தலையிடுவதன் நோக்கமே குழப்பத்தை ஏற்படுத்திவிடுவதுதான். இது முற்றுமுழுதாக இந்துக்கள் தங்களுக்குள் தீர்த்துக்கொள்ள வேண்டிய ஓர் பிரச்சினையாகும்.

இந்து மதத்தைச் சேர்ந்த உயர் சாதித் தமிழர்கள் என்று கூறப்படுவோருக்கும் சிறுபான்மைத் தமிழர்கள் என்று கூறப்படுவோருக்கும் சுதந்திரன் விடுக்கும் வேண்டுகோள் இது தான்—ஆலயப்பிரவேசப் பிரச்சினையால் தமிழினத்தின் ஐக்கியம் சிதைக்கப்படுகிறது; தமிழினத்தை ஏனைய இனத்தவர்கள் கேவலமாகப் பேசுகிருர்கள்; கிண்டல் செய்கிருர்கள். இந்த நிலை நீண்டு கொண்டு போக விடாதீர்கள்! மனமாற்றத்தின் மூலமும் விட்டுக்கொடுப்பது மூலமும், பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாண முன்வாருங்கள் என்று தமிழன்னையின் பெயரால் வேண்டுகிறேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யுத்தம் இல்லை என்பதால் சமாதானம் ஏற்பட்டு விட்டதென அர்த்தம் கொள்ளாதீர்!

## கிழக்கு மாகாணம் உருகுணையின் பகுதியாம்

"வடக்கு, கிழக்கு மாகாணங்கள் என்று எதுவும் இலங்கையில் முன்பு இருந்தது கிடையாது. இவையெல்லாம் பிரிட்டிஷாரால் ஏற்படுத்தப்பட்டவையாகும். பிரிட்டிஷார், தங்கள் ஆட்சிக்கு வசதியாக மாகாணங்களைப் பிரித்துக் கொண்டனர். இலங்கையில் மாவட்டங்கள் உள்ளனவேயன்றி மாகாணங்கள் கிடையாது.

'இன்று இருப்பது போன்ற மாகாணப் பிரிவினை சரித்திர காலத்தில் இருக்கவில்லை. இலங்கை, ராஜரட்டை, மாயரட்டை, உருகுணைரட்டை என்று முப்பிரிவாக வகுக்கப்பட்டிருந்தது. இப்போது கிழக்கு மாகாணம் என்று அழைக்கப்படும் பகுதி உருகுணைரட்டையின் ஓர்பகுதியாக இருந்து வந்திருக்கிறது. இப்போதைய கிழக்கு மாகாணம் வெள்ளையர்களால் செயற்கையாக உண்டாக்கப்பட்டது. கிழக்கு மாகாணம் என்று இன்று அழைக்கப்படும் பகுதியில் வாழும் தமிழர்களுக்கும் வடமாகாணத் தமிழர்களுக்கும் வித்தியாசமும் உண்டு"

—இவ்வாறு அரியணை உரை விவாதத்தின் போது மூதவையில் பேசிய திரு. வேர்ணன் திசாநாயகா குறிப்பிட்டிருக்கிறார்.

## அடிப்படை உரிமைகளை இழக்க ஒருபோதும் தமிழர் ஒருப்படார்!

"யுத்தம் இல்லையென்பதால் சமாதானம் நிலவுகிறதென்று அர்த்தம் கொள்ள முடியாது என்று ஒருமுறை நீகிரோ தலைவர் மார்ட்டின் லூதர் இங் கூறினார். அதையே சிங்கள இனவெறியர்களுக்கு சிறுபான்மை மக்களின் சார்பில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பெரும்பான்மை மக்களின் எப்படிப்பட்ட பயமுறுத்தலுக்கும் நெருக்குதலுக்கும் பயந்து சிறுபான்மை மக்கள் தங்கள் அடிப்படை உரிமைகளை விட்டுக்கொடுக்க மாட்டார்கள். எல்லா இனங்களுக்கும் நியாயம் வழங்கப்படுவதில் தான் உண்மையான சமாதானத்தையும் அமைதியையும் காண முடியும். இல்லாவிட்டால் இந்நாட்டில் என்றும் நிரந்தர அமைதி ஏற்பட முடியாது"

இவ்வாறு அரியணை உரை விவாதத்தின் மீது பாராளுமன்றத்தில் உரையாற்றிய உடுவில் எம். பி. திரு. வீ. தர்மலிங்கம் குறிப்பிட்டார்.

## சிங்கள இன வெறியர்களுக்கு தர்மலிங்கத்தின் எச்சரிக்கை!

திரு. தர்மலிங்கம் தொடர்ந்து பேசியதாவது:—

'இன்று இந்நாட்டில் மாவட்டசபைப் பிரச்சினை, தமிழரசுக் கட்சியின் கொள்கைகளையும், அதன் கடந்த கால, நிகழ்கால நடவடிக்கைகளையும் ஆராயும் பிரச்சினையாக மாற்றப்பட்டிருக்கிறது. தமிழரசுக் கட்சியைப் பொறுத்த வரையில் நாம் நடந்துவந்த பாதை முற்றிலும் சரியானது என்பதில் எவ்வித ஐயமும் நமக்கு கிடையாது. இப்போது நாம் சென்று கொண்டிருக்கும் பாதையும் சரியானதென்பதே நமது திடமான கருத்தாகும். எங்கள் கொள்கைகளும் கோட்பாடுகளும் தவறானது என்று கூறப்படுவதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. நாம் செல்லும் பாதைதான் தமிழ் பேசும் மக்களின் எதிர்கால சுபிட்ச வாழ்வுக்கு வழி வகுக்கும் என்று திடமாக நம்புகிறோம்.

யாழ்ப்பாணத்தில் எழுந்துள்ள சாதிப்பிரச்சினைபற்றி எதிர்க்கட்சியினர் முதலைக் கண்ணீர்வடிக்கிறார்கள். தம்பதேனியா எம். பி. வடிக்கும் முதலைக் கண்ணீர் இன்னும் வேடிக்கையானதாகஇருக்கிறது.

தமிழரசுக் கட்சியினர் சிறுபான்மைத் தமிழர்களின் நலனைக் காக்க அநேக நடவடிக்கைகள் எடுத்துள்ளனர். எமது உள்ளூராட்சி அமைச்சர் அச்சுவேலியில் இவர்களுக்கென்று வீடமைப்புத் திட்டம் அமைத்துக்கொடுத்துள்ளார்.

### நாம் கொண்டுவந்த சட்டம்

1957-ம் ஆண்டுச் சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம் தமிழரசுக் கட்சியின் வேண்டுகோளின் பேரிலேயே காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகாவினால் கொண்டுவரப்பட்டது. இச் சட்டத்தின் கீழ் சிறுபான்மைத் தமிழர்களுக்கு நியாயம் கோரி வழக்குகள் தாக்கல் செய்து அவ்வழக்குகளை வேதனம் எதுவும் பெறாமல் தமிழரசுக் கட்சி வழக் கறிஞர்கள் வாதாடினார்கள் என்பதை இச் சபையில் கூறிவைக்க விரும்புகிறேன். இப்போது சிறுபான்மைத் தமிழர்களுக்காக கூச்சல் போடும் கட்சிகளின் வழக்கறிஞர்கள் அப்போது இவ்வழக்குகளில் எவ்வித பங்கும் ஏற்கவில்லை.

### யாழ்ப்பாணம் இலங்கையில்தான்

எமது கட்சி யாழ்ப்பாணத்தில் சிறுபான்மைத் தமிழர்களுக்காக என்ன செய்கிறதென்பதை நேரில் கண்டறிந்துகொள்வதற்கு தம்பதேனியப் பிரதிநிதி போன்றவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வரவேண்டும் என்று அழைப்பு விடுக்கிறேன். யாழ்ப்பாணம் தென்னிந்தியாவில் இருக்கிறதென்று திரு. ஆர். ஜி. சேனநாயக்கா நினைக்கிறார் போலும். யாழ்ப்பாணம் இலங்கையில்தான் இருக்கிறதென்பதை அவருக்கு நினைவுறுத்த விரும்புகிறேன்.

### ஒரே நோக்கம்

இந்த நாடு தனிச் சிங்கள நாடாக இருக்க வேண்டும் என்றும் தமிழ் மக்கள் ஒழித்துக் கட்டப்பட வேண்டும் என்பதுதான் திரு. ஆர். ஜி. சேனநாயக்காவின் புதிய கட்சியினதும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் நோக்கமாகும். திரு. ஆர். ஜி. சேனநாயகா துணிச்சலோடு வெளிப்படையாக எடுத்துக் கூறுவதையே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் மறைமுகமாகச் செய்கிறார்கள்.

பிரிட்டிஷ்காரர்கள் கையாண்ட பிரித்தாளும் சூழ்ச்சியையே தமிழ் பேசும் மக்கள் மத்தியில் திரு. ஆர். ஜி. சேனநாயக்கா கையாளப் பார்க்கிறார்.

அநேக கிராமசபைகளில் சிறுபான்மைத் தமிழர்களுக்கு நியாயமான அங்கத்துவம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எமது உள்ளூராட்சி அமைச்சர் மேற்கொண்டுள்ளார்.

---

வடக்கு கிழக்கை தமிழகத்துடன் இணைப்பது குறித்து

## தமிழரசுத் தலைவர்களுடன் எம். ஜி. ஆர். பேசினாராம்!

இலங்கைத் தமிழரசுக் கட்சியினருக்கும் தமிழகத்தை ஆட்சி புரியும் இந்திய திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும் இரகசியத் தொடர்பு இருந்து வருகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களை கூறுபோட்டு அவ்விரு மாகாணங்களையும் திராவிட முன்னேற்றகழக ஆட்சியுடன் இணைப்பதே தமிழரசுக்கட்சியின் முக்கிய குறிக்கோளாகும். எனெனில் தி. மு. க. ஆட்சி தனது எல்லையை விஸ்தரிக்கும் நோக்குடன் ஓர் ஆலோசனைக் கூட்டத்தை அண்மையில் நடத்தியிருக்கிறது. அக் கூட்டத்தில் ஆந்திரப் பிரதேசத்தில், விஜயவாடா முதலும், கேரளத்தில் கொச்சி முதலும், உட்பட்ட பிரதேசம் அனைத்தையும், இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களையும் தமிழக அரசுடன் இணைக்க வேண்டுமென ஆலோசனை கூறப்பட்டது.

இதன்படியே தி. மு. க. தலைவர்களில் ஒருவரான புரட்சி நடிகர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் இலங்கைக்கு வந்து தமிழரசுத் தலைவர் திரு. செல்வநாயகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி சென்றுள்ளார்."

இவ்வாறு வண: யட்டிதரியே வஜிர புத்தி தேரோ மக்கொனை, ... நடைபெற்ற ... றில் விஷம் கக்கியுள்ளார்.

---


## 29 வருடங்கள் அனுபவம்



கல்வித்திறன், தெய்வபலன், மந்திர பலன், கைத்திறன் உறுதி அளிப்பதற்காக கணவன் மனைவி இருசாராருக்கும் கட்டணம் இல்லாமல் நிவாரணம் செய்துகொடுக்கப்படும்.

சரியானதற்குப் பிறகுதான் விரும்பிக் கொடுக்கும் காணிக்கை ஏற்றுக் கொள்ளப்படும்.

தொழில் கிடைப்பதற்கு, வேளாண்மை, வர்த்தகம், வியாபாரம் முன்னேற, காதல் அன்பு நிலைத்திருக்க, விலகி நிற்பவர்களை சேர்த்துக் கொள்ள, அதிர்ஷ்டமான திருமணம் நடைபெற, வேண்டாதவர்களை விலக்கி வேண்டியவர்களை வசப்படுத்திக் கொள்ள, கணவன் மனைவி பிணக்குகள் நீங்கிவிட, சந்தேகம், மதுபானம், சூதாட்டம் இவைகளில் நின்றும் தவிர்த்துக் கொள்ள, குழந்தைகளின் கல்வி முன்னேற, வழக்குத்தொல்லைகளில் நின்று தவிர்த்து வெற்றியடைய, விரோதிகளுக்குப் பழிஅடித்து தண்டனை பெற வைக்க கொடியவர்கள் அடங்கி விட, உழைப்பதை சேமித்து விட, குடும்பத்தினர் ஒற்றுமைக்கும் ஆவல்களுக்கும் எல்லா காரணங்களுக்கும் நிவாரணம் செய்து கொடுக்கப்படும் இரகசியங்களை வெளியிடமாட்டோம்.

விபரங்களுக்கு எழுதுங்கள். சந்திப்பு: ஞாயிறு, திங்கள் இரு நாட்களில் கம்பளையிலும், செவ்வாய் முதல் சனிக்கிழமை வரை கொழும்பிலும் சந்திக்கலாம்.

மகா மாந்திரீக கலாநிதி
**பி. எம். திசாநாயக்க,**
(... பதிவு செய்யப்பட்ட மாந்திரீக வைத்தியர்)
நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா
கம்பளை, போன்: 451 — த. பெட்டி இல: 1281 கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# நாடு பிளவுபடுவதை நாம் விரும்பவில்லை!

## சமஷ்டி கொள்கையிலிருந்து இம்மியும் நழுவமாட்டோம்

### மூதவையில் அமைச்சர் 'திரு' கர்ஜனை!

"எங்களைப் பார்த்து சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிடுங்கள் என்று சிலர் கூறுகிறார்கள். அது ஒரு போதும் நடக்கவே நடக்காது. சமஷ்டிக்கொள்கையை நாம் எவ்வளவு நெருக்கடிகள், பயமுறுத்தல்கள், கஷ்டங்கள், தொல்லைகள் ஏற்பட்டாலும் கைவிட்டு விடமாட்டோம். இந்நாட்டில் தமிழ் பேசும் மக்கள் சுய மரியாதையுடன், சம அந்தஸ்துப் பெற்று வாழ்வதற்கு ஒரே மார்க்கம் இந்நாட்டில் ஒரு சமஷ்டி யாட்சியை ஏற்படுத்துவதுதான் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுதியாக நம்புகிறது.

அதே வேளையில் இலங்கையை பிளவுபடுத்தும் எண்ணம் எம்மிடம் துளிகூட இல்லை. எமது உரிமைக் கிளர்ச்சிக்கு வெளிநாட்டு உதவியும் கோரமாட்டோம்.

சமஷ்டி அமைப்பின் கீழ் ஓர் ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்புவதில் நமக்கு இன்னும் நம்பிக்கையிருக்கிறது."

இவ்வாறு உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் மூதவையில் அரியணை உரைக்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணை மீது பேசிய போது உறுதிமிக்க குரலில் குறிப்பிட்டார். தமிழரசுக் கட்சி மீது சாட்டப்பட்டு வரும் குற்றச் சாட்டுக்களுக்கு அமைச்சர் தமது பேச்சில் சுடச் சுட பதில் அளித்தார்.

அவர் தமது பேச்சில் மேலும் சொன்னதாவது:—

கடந்த மூன்று மாதங்கள் தமிழ் மக்களுக்கு அரசியலில் நெருக்கடி மிகுந்த சூழ்நிலை நிலவி வந்தது. செனட்டர் ஹமீம் இச்சபையிலே பேசும்போது சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிடுவீர்களா என்று நம்மைப் பார்த்துக் கேட்டார்.

செனட்டர் ஹமீம் நடைமுறை சாத்தியமற்ற ஓர் கோரிக்கையை விடுத்துள்ளாரென்றுகருதுகிறேன். ஓர் சமஷ்டி அரசமைப்பின் கீழ் தான் தமிழ் பேசும் மக்கள் மொழி, கலாசார, மத உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளலாம்; பேணி வளர்த்து வரலாம் என்பதில் தமிழரசுக்கட்சிக்கு உறுதியான நம்பிக்கையிருந்துவருகிறது. எனவே சமஷ்டிக் கொள்கையிலிருந்து ஒரு அடி கூட நழுவமாட்டோம் என்பதை இச்சபையிலிருந்து நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தமிழ் மக்களின் உரிமைகளைப் பொறுத்தவரை தமிழரசுக் கட்சியினராகிய நாம் ஒரு துளியும் விட்டுக் கொடுக்கவுமில்லை; விட்டுக் கொடுக்கவும் மாட்டோம். நாங்கள் யாரிடத்திலும் சரணுகதியடையவும் மாட்டோம். எங்கள் முதுகில் புண் எதுவும் கிடையாது. நாங்கள் போராடிக் களைத்துப்போன படையினர் அல்லர். தேவை ஏற்படும்போது நமது உரிமைகளுக்காகப் போராடவும தயங்க மாட்டோம்.

#### குத்துக் கரணம்

தமிழரசுக்கட்சி இந்நாட்டில் சனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கென ஐ. தே. கட்சியோடு சேர முடிவு செய்தபோது, எம்மை வாழ்த்தித் துதிபாடிய சில பத்திரிகைகள் இன்று எம்மைத்தூற்றி எழுதுகின்றன. அடிக்கடி குத்துக் கரணம் அடிக்கும் இப்பத்திரிகைகளை நாம் பொருட்படுத்த மாட்டோம். நமக்கு எது சரியென்றுபடுகிறதோ அதையே செய்வோம்.

தமிழரசுக்கட்சி, தமிழரசுக்கட்சியாகவே அரசாங்கத்தில் சேர்ந்தது. தமிழரசுக் கட்சியாகவே அது இயங்கி வருகிறது. தமிழரசுக் கட்சியாகவே அது எப்போதும் இயங்கியும் வரும். இதை எதிர்க்கட்சியினர் தெரிந்து கொள்ளட்டும்.

நான் இந்த நாட்டுப் பெரும்பான்மைச் சிங்கள மக்களிடம் ஒரேயொரு கேள்வி கேட்க விரும்புகிறேன்—இந் நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் தங்களுக்கு விளங்காத மொழியில் அரசாங்க உத்தரவுகளைப் பெற வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்ப்பது நியாயமானது தானு? தமிழ் பேசும் மக்களுக்குத் தங்கள் மொழியிலேயே அரசாங்கத்துக்கு எழுதி அதே மொழியில் பதில் பெறும் உரிமையை மறுப்பது நீதியாகுமா?

---

# சிறுபான்மை பிரச்சினையை தீர்ப்பதற்கு உங்கள் திட்டம்தான் என்ன?

## கூட்டாட்சிவாதிகளுக்கு செனட்டர் நடேசன் சவால்!

### தமிழரசார் சமஷ்டிக்கொள்கையை எதற்காகக் கைவிட வேண்டும்?

"ஒரு நாட்டில் வாழும் சிறுபான்மை மக்கள், எந்த நாளும் பெரும்பான்மை இனத்தின் தயவிலும் நல்லெண்ணத்திலுமே தங்கியிருக்க முடியாது. இந்நாட்டிலே சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை மக்களின் ஆளுகைக்குக்கட்டுப்பட்டு வாழ மறுத்து வருகிறார்கள். அவர்கள் தங்களுக்கும் சம அளவு அதிகாரம் காரம் கோருகிறார்கள். இந் நாட்டிலே தீராது இருந்துவரும் சிறுபான்மையர் பிரச்சினையைத் தீர்க்க கூட்டுக் கட்சிகள் தங்கள் மாவட்டசபை எதிர்ப்பு கூட்டங்களின் போது ஒரு குறிப்பாவது எடுத்துக் கூறியிருக்கிறார்களா?

"கூட்டுக் கட்சிகள் நாடு முழுவதும் சென்று மாவட்ட சபை ஏற்பட்டால், தமிழ் மக்களுக்கு அது கிடைக்கும் இது கிடைக்கும் என்று பிரசாரம் செய்கிறார்கள். நான் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். —தமிழர்களும் இந் நாட்டு பிரஜைகள் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா? தமிழர்களுக்கு எதுவுமே கிடைக்கக் கூடாது என்பதுதான் உங்கள் கொள்கையா? தமிழர்களுக்கு ஏதாவது உரிமைகள் கிடைத்தால் அதில் என்ன தவறு?"

இவ்வாறு மூதவையில் அரியணை உரை விவாதத்தின் போது பேசிய திரு. எஸ். நடேசன் கியூ. சி. குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசிய போது கூறியதாவது:-

#### அமெரிக்க உதவி

'இந்தச் சபையிலே சமசமாசக் கட்சியைச் சேர்ந்த செனட்டர் டொரிக்டீசூசா திருமலைத் துறைமுகத்தை கைப்பற்ற தமிழரசுக்கட்சியின் உதவியுடன் வடபகுதியில் அமெரிக்கா திட்டமிட்டு வருகிறதென்றும், சென்னையில் உலகத் தமிழர்களின் விடுதலைக்குப் போராடவென திராவிட முன்னேற்ற கழகம், இராணுவம் அமைத்துள்ளதென்றும் கூறினர். கல்வி மானுன டொரிக்டீசூசாவே இப்படி பேசினர். சமசமாஜக் கட்சியிலுள்ள அடி மட்டத்திலுள்ள தொண்டர்கள் எப்படி நடந்துகொள்வார்கள் என்பதை ஒருவர் புரிந்து கொள்ள முடியும். அவசர கால சட்டம் இருக்கும் போதே இத்தகைய உணர்ச்சியூட்டும் பொய்ப் பிரசாரங்கள் நடைபெறும் போது, அவசரகாலச் சட்டம் இல்லாவிட்டால் நிலைமை என்னவென்பதை நினைத்துக்கூட பார்க்கமுடியாது.

#### மூன்று வழிகள்

சிறுபான்மையோர் பிரச்சினை இந்நாட்டுக்கு மட்டும் உள்ள தனிப்பட்ட பிரச்சினையல்ல: உலகெங்கும் பொதுவாக இதே பிரச்சினையிருக்கிறது. இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பல வழிகள் இருக்கின்றன. அவற்றிலொன்று இரு மொழிகளுக்கும் சமத்துவமளிப்பது. மற்றோர் வழி ஒரு சமஷ்டியாட்சியை ஏற்படுத்துதல்.

#### சமஷ்டி ஆட்சி

அமெரிக்கா, கனடா போன்ற முதலாளித்துவ நாடுகளும் சோவியத் ரஷியா போன்ற சோஷலிச நாடுகளும் தங்கள் நாடுகளிலுள்ள சிறுபான்மைப் பிரச்சினையை சமஷ்டி ஆட்சி மூலம் தீர்த்துக் கொண்டுள்ளன. சுவிட்சர்லாந்து போன்ற சிறிய நாடுகளும் சமஷ்டியை ஏற்றுள்ளன. இந்தியாவிலும் சமஷ்டியே இருக்கிறது. இந்த நாடுகள் எல்லாவற்றிலும் சமஷ்டி வெற்றியளித்துள்ளது. இலங்கையிலும் சிறுபான்மைப் பிரச்சினையை தீர்ப்பதற்கு சமஷ்டியையே சரியான வழியென தமிழரசுக் கட்சி தேர்ந்தெடுத்திருக்கிறது.

#### மற்றோர் வழி

இவையிரண்டையும் விட மூன்றாவது ஒரு வழியும் உண்டு. அது பிரதேச சுயாட்சி முறையாகும். செக்கோஸ்லவேக்கியா, இத்தாலி, சீனு போன்ற நாடுகளில் இந்த முறை கையாளப்பட்டு வருகிறது. இந்த நாடுகளில் ஒவ்வொரு சிறு பான்மையினத்துக்கும் பிரதேச சுயாட்சி வழங்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சிறுபான்மை இனமும் தத்தமக்குரிய பிரதேசத்தில் தங்கள்மொழி, மதம், கலை, கலாசாரம் போன்றவற்றை வளர்த்து வருவதுடன் தமக்கெனத் தனித் தனிப் பல்கலைக் கழகங்களைக்கூட நிறுவியுள்ளன.

இலங்கையில் தமிழரசுக் கட்சி சமஷ்டி மூலம் இப் பிரச்சினைக்கு தீர்வுகாண முயலுகிறது.

#### திணிக்க முடியாது

மனித உரிமைகள் பற்றி உலகம் முழுவதும் சர்வதேச ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் ஏற்பட்டு வரும் இந்நாட்களில் எந்த ஒரு நாட்டிலும் சரி மக்களின் தொண்டைக்குள் அவர்கள் விரும்பாத மொழியைத் திணித்துவிட முடியாது.

இந்த நாட்டில், தேசிய சிறுபான்மை மக்களையும் அங்கீகரித்து, அவர்களின் ஆரம்ப அடிப்படை உரிமைகளை வழங்குவதற்கு பெரும்பான்மை இனமக்கள் முன்வராதவரை, சமாதானம், ஒற்றுமை, முன்னேற்றம் எதுவுமே ஏற்பட முடியாது. ஒரு தேசிய சிறுபான்மையினர் மீது வேறொரு மொழியை திணிப்பது நடவாத காரியம்.

சிறுபான்மைப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். எல்லா அரசியற்கட்சிகளும் தவறிழைத்து விட்டன. சில கட்சிகள் அதையுணர்ந்து தவறைத்திருத்த முயலும் போது மற்றக் கட்சிகள் குழப்பிவிட முனைகின்றன. ஐதே. கட்சியும், தமிழரசுக் கட்சியும் சிறுபான்மைப் பிரச்சினைக்கு தீர்வுகாண முனைவதை முறியடிப்பதில் கூட்டுக் கட்சிகள் சிரத்தை காட்டுகின்றன.

#### ஏன் விடவேண்டும்?

தமிழரசுக்கட்சி தனது சமஷ்டிக் கொள்கையை கைவிட வேண்டுமென நாட்டில் ஒரு குரல் கேட்கத் தொடங்கியிருக்கிறது. இச் சபையிலும்அது கேட்டது.

எந்த ஒரு அரசியற்கட்சியும் ஏன் தனது கொள்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவட்ட சபைகளைக் கைவிடுவதால்

# பிரதமர் அடையும் இலாபம் மூச்சுவிடும் நேரம் மட்டுமே!

## யூ. என். பி. வீழ்ந்து சிறிமா ஆட்சி ஏற்பட்டால் தமிழருக்கு நன்மையா? — "இந்து"வின் தலையங்கம்

"மிக அமைதியாக மாவட்ட சபைகள் மசோதாவைக் கைவிடுவதற்கு முடிவு செய்ததன் மூலம், இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா, மிகக்கஷ்டமான நிலையிலிருந்து தம்மை விடுவித்துள்ளதாக நினைக்கலாம். ஆனால் அவர் அதனால் அடையும் இலாபம் மூச்சு விடும் நேரம் மட்டும் தான். ஏனெனில் அவர் தமது கட்சிக்குள் பிளவு ஏற்படுவதைத்தடுத்து எதிர்க் கட்சியினரின் கூச்சலையும் அடக்கியுள்ள அதே நேரத்தில் தமது கூட்டரசாங்கக் கட்சியான தமிழரசுக்கட்சியுடன் உள்ள உறவுகளைப் பாதிக்கக் கூடியதாக நடந்துள்ளார்.

அரசாங்கம் பதவிக்கு வந்தவுடனேயே மாவட்ட சபைகள் மசோதாவை கொண்டு வந்திருந்தால் எதிர்க்கட்சியினர் இவ்வளவு எதிர்ப்பைக் கிளப்பியிருக்க முடியாது"

இவ்வாறு சென்னையிலிருந்து வெளிவரும் பிரபல ஆங்கில நாளிதழான இந்து ஏட்டில் இம்மாதம் 18ம் திகதி 'இலங்கைத்தமிழர்களும் திரு.சேனநாயக்காவும்'' என்னும் தலைப்பின் கீழ் எழுதியுள்ள ஆசிரிய தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

அத்தலையங்கம் மேலும் கூறுவதாவது:—

சேனநாயக்கா அரசாங்கத்திற்கு அளித்து வரும் ஆதரவை வாபஸ் பெறவேண்டும் என்ற நிர்ப்பந்தம் தமிழரசுக் கட்சிக்குள் அதிகரித்து வருகிறது. தமிழரசுக் கட்சியின் ஆதரவு இல்லாமல் சேனநாயக்கா அரசாங்கம் பதவி இழக்கக் கூடும். இந்த நிலையில் தமிழரசுக் கட்சி ஆற அமர சிந்தித்து செயல்பட வேண்டும்.

சேனநாயகா அரசாங்கத்தை பதவியிலிருந்து வீழ்த்தி திருமதி பண்டாரநாயகா கோஷ்டியை ஆட்சிக்கு வரச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுப்பதால் தமிழர்களுக்கு நன்மையா தீமையா விளையும்? மாவட்டசபை அமைக்கப்பட வேண்டும் என்பதிலும் பார்க்க தமிழர் முக்கியமாக உடனடியாக முடிவு காண வேண்டிய கேள்வி இதுவாகும்''

## சிங்களவர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதே வேளையில் இரு தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் ஒருவரோடொருவர் மோதிக் கொண்டதை நாடு காண நேரிட்டது"

இவ்வாறு அரியணை உரை விவாதத்தின் போது பாராளுமன்றத்தில் உரையாற்றிய திரு. பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயக குறிப்பிட்டார்.

இரு பெரும் சிங்களக் கட்சிகளிடையே தமிழரசுக் கட்சியினர் பேரம் பேசுவதற்கு இனிமேல் இடமளிப்பதில்லையென்று தமது கட்சி தீர்மானித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாவட்டசபையை எதிர்த்து தமிழ் காங்கிரஸ் நடந்துகொண்ட துரோகத்துக்கு திரு. பீலிக்ஸ் வழங்கியுள்ள ''பாராட்டு'' இது வென்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ் மக்களின் கட்டுக் கோப்புக்கும் ஐக்கியத்துக்கும் உலை வைத்து வரும் தமிழ் காங்கிரஸ் எம். பீ. களுக்கு மனச்சாட்சியிருக்குமானால், திரு. பீலிக்சின் குத்தல் பேச்சு அவர்களின் மனதைக் குத்திக் குடைந்திருக்கும் என்று தமிழ்ப் பிரமுகர் ஒருவர் திரு. பீலிக்ஸ் பேச்சுப்பற்றி குறிப்பிட்ட போது சுதந்திரன் நிருபரிடம் கூறினர்.

## சமஷ்டிக் கோரிக்கை....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யற்ற குட்டிக் கட்சி பற்றி சிங்களத் தலைவர்களுக்கு சிறிதும் அக்கறையோ அச்சமோ கிடையாது. பதவியென்ற எலும்புத் துண்டுக்கு அக் கட்சித் தலைவரை விலைக்கு வாங்கி விடலாம் என்பது அவர்களுக்கு புரியும்.

எனவேதான் தமிழரசுக் கட்சியைப் பார்த்து நெஞ்சிலே நஞ்சும், நாக்கிலே தேனும் தடவிக் கொண்டு சமஷ்டியை விட்டு விடுங்கள் ஒற்றுமையாக இருப்போம் எனகிருர்கள்.

### அவர்களின் திட்டம்

இந்த நாட்டில் தமிழ் மக்கள சுயமரியாதையுடன் வாழ்வதற்கு சமஷ்டிதான் ஒரே மார்க்கம் என்று தமிழரசுக் கட்சி உறுதியாக நம்புகிறது. தமிழரசுக் கட்சியைப் பார்த்து சமஷ்டியைக் கைவிடுங்கள் என்று கூறுபவர்கள் சிறுபான்மை இனத்தின்—தமிழினத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மாற்றுத் திட்டம் ஏதாவது தருகிருர்களா என்ருல் எதுவுமில்லை. அவர்கள் தரும் மாற்றுத் திட்டம்-சமஷ்டி கோரிக்கையை கைவிட்டு விட்டு, தனிச் சிங்களத்தை ஏற்றுக் கொண்டு, சிங்கள மக்களுடன் இரண்டறக் கலந்து சிங்கள இனமாக மாறி விடுங்கள் என்பது தான். இதை எந்த மானமுள்ள தமிழ் பேசும் மகனும் ஏற்றுக்கொள்ள மாட்டான்.

சமஷ்டியைக் கைவிட வேண்டுமென்று கூறும் சிங்களக் கட்சிகளும், சிங்களத் தலைவர்களும் ஒற்றையாட்சியினுல் தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளை முதலில் துடைக்க முன் வருவார்களா?

### ஒற்றையாட்சி விளைத்த கேடுகள்

ஒற்றையாட்சியின் கீழ் தான இந் நாட்டு தமிழ் பேசும் மக்களில் சரி அரைவாசிப் பேரான 10 இலட்சம் மலைநாட்டுத் தமிழரின் வாக்குரிமை குடியுரிமை பிடுங்கப்பட்டது.

ஒற்றையாட்சியின் கீழ் தான் சிங்கக்கொடி இந் நாட்டின் தேசியக் கொடியானது.

ஒற்றையாட்சியின் கீழ் தான் தமிழ்ப் பகுதிகளில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றம் பெருமளவில் நடந்தது; நடந்து வருகிறது. பட்டிப்பளை கலோயாவாக மாறியதும், அம்பாறை அல்லை, கந்தளாய் போன்ற தமிழ் பகுதிகள் சிங்கள மயமானதும் ஒற்றையாட்சியின் கீழ்தான்.

ஒற்றையாட்சியின் கீழ்த்தான் சிங்களம மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டு, தமிழ் மக்களின் மொழியுரிமை பறிக்கப்பட்டுவிட்டது.

ஒற்றையாட்சியின் கீழ் தான், 1956க்குப் பின் பல தடவைகளில் இனக்கலவரங்கள் மூண்டன; தமிழ் மக்கள் வேட்டையாடப்பட்டனர்: சொத்து சுகங்களை இழந்தனர். தமிழ்ப் பெண்களின் கற்பு சூறையாடப்பட்டது.

ஒற்றையாட்சியின் கீழ் தான் அரசாங்க உத்தியோகங்களிலிருந்து பெருமளவில் தமிழர்கள் விரட்டப்பட்டனர்-விரட்டப்பட்டு வருகின்றனர்.

ஒற்றையாட்சியின் கீழ் தான் வடக்கும் கிழக்கும் இராணுவ கூடாரமாக மாறியது.

இந்நாட்டில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அத்தனை துன்பங்களுக்கும் கொடுமைகளுக்கும் மூல காரணமான இதே ஒற்றையாட்சியைத் தான் திரு. பொன்னம்பலமும் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதையும் தமிழ் மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒற்றையாட்சியின் கீழ் தான் இந் நாட்டு தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளை முதலில் துடைக்க முன் வருவார்களா?


சிங்களத்தலைவர்கள் இந் நாட்டில் சிங்கள ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காக ஒற்றை யாட்சியில் உறுதியாக இருக்கிருர்கள் எனருல் தமிழ் மக்களுக்காக பாடுபடுவதாக கூறிக் கொள்ளும் திரு. பொன்னம்பலமும் அதை ஆதரிப்பது படுதுரோகமல்லவா? என்ன செய்வது குலத்துக் கீனம் கோடரிக்காம்பு தானே?

ஆகவே ஒற்றையாட்சியின் கீழிருக்கு மட்டும் தமிழினம் ஈழத்தில் தலை நிமிர்ந்து வாழவே முடியாதென்பது இதனுல் உறுதியாகிறது.

சிங்களத் தலைவர்கள் கோருவது போல தமிழரசுக் கட்சி சமஷ்டிக் கோரிக்கையை கைவிட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டு வருகிறதென்பதை நாம் மறுப்பதற்கில்லை. தென்னிலங்கையில் அதிகரித்து வரும் மிதமிஞ்சிய சிங்கள இனவெறி காரணமாக சமஷ்டிக் கோரிக்கையை கைவிட வேண்டிய நிலை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டால் நாம் ஆச்சரியப் படமாட்டோம்.

ஆனுல் அப்படியொரு நிலையில் சமஷ்டியை கைவிட்டு ஒற்றையாட்சியை ஏற்றுக் கொள்ளுங்கள் என்ற சிங்களத் தலைவர்களின் கோரிக்கைக்கு பதிலாக சமஷ்டியை கைவிட்டு பிரிவினை கோர வேண்டிய நிர்ப்பந்தம் தமிழ் மக்களுக்கு ஏற்படலாம். ஆனுல் எக்காலத்தும் ஒற்றையாட்சி அமைப்பை [illegible] ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதை உறுதியுடன் சொல்லி வைக்க விரும்புகிறோம்.

## தமிழ் காங்கிரஸ் "கோட்டையை" தமிழரசார் கைப்பற்றினர்!



நீண்டகாலமாக தமிழ் காங்கிரசின் 'கோட்டையாக' விளங்கி வந்த கொக்குவில் கிராமசபையை அண்மையில் தமிழரசு ஆதரவாளர்கள் கைப்பற்றினர். படத்தில் கொக்குவில் கி. ச. வின் புதிய தலைவர் திரு. எஸ். கே. சபாபதியும் (கண்ணுடி அணிந்துள்ளவர்) உப தலைவர் திரு. ந. அருணுசலமும் (தமிழரசு வாலிப முன்னணி செயலாளர்) மற்றும் தமிழரசு ஆதரவாளர்களான கிராமசபை உறுப்பினர்களும் காணப்படுகின்றனர்.

## தனிச்சிங்கள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிக்கும் யூ. என். பிக்குமிடையே வேறுபாடு இருப்பதுதான்.

தேசிய அரசாங்கம்தோல்வியடையக்கூடிய நிலை ஏற்படினும், தமிழரசுக் கட்சியின் ஆதரவின்றி சுதந்திரக் கட்சியாலும் தனியே ஒரு அரசாங்கத்தை இன்றைய நிலையில் நிறுவ முடியாது. அப்போது மீண்டும் மாவட்ட சபைகளை நிறுவ சுதந்திரக்கட்சியினர் முயலுவர்''

## சிறுபான்மை...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கையை விட்டுக் கொடுக்க வேண்டுமென நான் கேட்கிறேன். கம்யூனிஸ்ட் கொள்கை ஒரே கட்சியாட்சி ஏற்பட வேண்டும் என்பது. ஆனுல் திருமதி சிறிமா கூட்டுக்கட்சிகளில் ஒன்ருக கம்யூனிஸ்டுகளையும் சேர்த்துக் கொள்வதற்கு அக்கொள்கை தடையாக இருக்கவில்லை. அல்லது தமது கொள்கையை கைவிட்டு விட்டதாக கம்யூனிஸ்டுகளும் அறிவிக்கவில்லை.

சமசமாசக்கட்சியும் இன்னும் மார்க்சீய கொள்கைகளில் நம்பிக்கை கொண்டிருக்கின்றது. எனினும் கூட்டுக்கட்சிகளில் ஒன்ருன பின் தனது கொள்கைகளை கைவிட்டு விட்டதாக சமசமாஜிகளும் அறிவிக்கவில்லை.

ஆகவே எதற்காக தமிழரசுக்கட்சி மட்டும் தனது கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கைவிட வேண்டும்?

## தமிழ்ச் சட்டத்தை....

(1 ம் பக்க தொடர்ச்சி)

வாய்ப்பினை இழக்க நேரிடுகிறது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசாங்கத் திணைக்களங்களிலிருந்து தமிழ் மக்களுக்கு அனுப்பப்படும் மொழி பெயர்ப்புக்களில் அதிகாரிகள் எந்த விதமான கையெழுத்தும் இடுவதில்லையென்றும் டாக்டர் நாகநாதன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது நிற்க, உத்தியோக மொழித்திணைக்கள பதில் ஆணையாளர் திரு. ஏ. பீட்டர் அபேசேகரா வெளியிட்டுள்ள 1966-67ம் ஆண்டுக்கான தமது நிர்வாக அறிக்கையில், தமிழ் மொழிச் சட்டத்தின் கீழ் 1966ம் ஆண்டு பிரமாணங்கள் நிறை வேற்றப்பட்ட பின்னர், எழுத்து மூலம் வெளியிடப்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்ட சகல பிரமாணங்களையும் அறிக்கைகளையும் தமது திணைக்களம் தமிழிலும் கட்டாயமாக மொழிபெயர்க்க வேண்டியிருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சமஷ்டியை கைவிடுங்கள்! இல்லாவிட்டால்......!"

## தமிழரசுக் கட்சிக்கு தேரோவின் எச்சரிக்கை!

## துட்டகைமுனு - எல்லாளன் சண்டையைநினைவுபடுத்துகிறார்!

**"சிங்கள மக்கள் சிங்கத்தின் வீரம் உள்ளவர்கள். அவர்கள் பொறுமை எல்லையைக் கடக்கும் போது பொங்கி எழுவார்கள். அப்படிப் பொங்கி எழும் போது எதிரிகள் தூள்தூளாகி விட்டிருப்பதற்கு சிங்கள சரித்திரத்தில் பல சான்றுகள் உண்டு...ஆகவே இந்நாட்டின் சனத்தொகையில் 95வீத மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாத சமஷ்டிக்கோரிக்கையை கைவிட்டு விடுங்கள் என்று சமஷ்டிக்கட்சியைக் கேட்டுக்கொள்கிறேன். தூங்கிக் கிடக்கும் சிங்கத்தை உசுப்பி விடாதீர்கள்." இவ்வாறு வண. மத்தி பன்னசீக மகாநாயக தேரோ தமிழரசுக் கட்சித் தலைவருக்கு எழுதியுள்ள ஒரு பகிரங்கக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

தமிழ் மக்களையும் தமிழரசுக்கட்சியையும் பயமுறுத்தும் பாணியில் எழுதப்பட்டுள்ள இக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

'சிறீலங்கா சிங்களவர்களின் நாடு. சிங்கள மக்களின் ஒரே நாடும்இதுதான். ஆகவே தான் முன்னாட்களில் இந்த நாடு சிங்கள துவீபம் என அழைக்கப்பட்டு வந்தது.

எண்ணிக்கையால் சிங்கள மக்கள் உலகில் குறைவாக இருந்த போதிலும், அவர்கள் பெருமைவாய்ந்த ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு பின்னால் ஒரு நீண்ட சரித்திரம் உண்டு. பௌத்த மதம் போதிக்கும் அன்பு, கருணை சமத்துவம் போன்ற கொள்கைகளினால் அவர்கள் அமைதியான ஓர் சமூகமாகவாழ்ந்து வருகிறார்கள்.

ஆனால் இந்த சிங்க இனம் தனது பணடைப் பாரம்பரியத்தை இழந்துவிடவில்லை. எனவே தேவையேற்படும் போது சிங்கம் போல முன்னுக்கு வருவது சிங்கள இனத்தின் வழமையான இயல்பாகும்.

சிங்கம் சில்லறை விடயங்களைக் கண்டு அச்சமடையாது. அற்ப விஷயங்களை அது உதாசீனப்படுத்தும். நாயைப்போல, தன்னைத் தாக்கும் கல்லை சிங்கம் கடிக்காது. ஆனால் அது பொறுமையை இழந்து பாய்ந்தால், தனது எதிரியை மிச்சம் மீதி வைக்காது. சிங்கத்தின் இந்த இயல்பு சிங்கள மக்களிடமும் இருந்து வந்துள்ளதென்பதற்கு சரித்திரத்தில் பல சான்றுகள் உள்ளன.


துட்ட கைமுனுவுக்கும் எல்லாளனுக்குமிடையே நடைபெற்ற யுத்தத்தை நினைத்துப் பாருங்கள். கலவரங்கள் சிங்கள மக்களால் ஆரம்பிக்கப்படவில்லை. அது எல்லாளனாலும் அவனது காடையர்களினாலும் தான் ஆரம்பிக்கப்பட்டது. எல்லாளனும் அவனது கூட்டாளிகளும், சிங்கள மக்களையும் பௌத்த மதத்தையும் அழிப்பதில் முனைந்திருந்தார்கள். சிங்கள மக்கள் இதையெல்லாம் சட்டை செய்யாது பௌத்த தர்மத்துக்கு கட்டுப்பட்டு எவ்வளவோ பொறுமையுடன் இருந்து வந்தனர்.

ஆனால் அவர்களின் பொறுமை ஒரு எல்லைக்கு வந்தவுடன், உருகுணையைச சேர்ந்த சிங்கள மாவீரனான துட்ட கைமுனு சிங்கம் போல முன்னுக்கு வந்தான். கைமுனுவின் படை எல்லாளனையும் அவனது படைகளையும் துவம்சம் செய்தது.

சிங்கள இனத்தின் எதிரிகள் இந்நாட்டிலிருந்து தங்கள் சொத்து சுகங்களையும் இழந்து ஓடியதை மறவாதீர்கள். சிங்களதுவீபத்தின் கடற்கரைகளிலிருந்து வெளியேறி அவர்கள் ஓடியதை மறவாதீர்கள். அவர்களை அவர்கள் நாட்டுக்கு ஓட ஓட விரட்டி அடித்ததை மறவாதீர்கள்.

ஆகவே தூங்கிக்கொண்டிருக்கும் சிங்கத்தை எழுப்பாதீர்கள். சமஷ்டி ஆட்சி கோரும் நீங்கள் நாட்டின் சனத்தொகையில் ஆக ஐந்து வீதமே. மீதி 95வீதம் பேர் சமஷ்டியை எதிர்க்கிறார்கள். ஆகவே சமஷ்டி கோரிக்கையை விட்டுவிடுங்கள். சமஷ்டியை கைவிட்ட பின்னர், தேவையென்று கண்டால் அதன் மேல் மாவட்ட சபைகளை நிறுவலாம்.

உன்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்'

'போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,

கொழும்பு -14.

## 'இந்தியா ஒரே நாடாக இருக்காது தென்னகம் தனியே பிரியும்'

### ரொனி டி. மெல்லுக்கு ஏற்பட்டுள்ள அச்சம்

'எதிர்காலத்தில் தொடர்ந்தும் இந்தியா ஒரே நாடாக விளங்கக் கூடிய சாத்தியக் கூறுகள் குறைந்து வருகின்றன. இந்தியா பிளவுபடும் போது தென்னகத்தில் ஒரு திராவிட சாம்ராஜ்யம் ஏற்பட்டே தீரும்.

'இலங்கை முன்னொரு காலத்தில் சோழ சாம்ராஜ்யத்திற்கு கட்டுப்பட்டு இருந்ததாக வரலாறு கூறுகிறது. அந்த நிலை மீண்டும் ஏற்படுவதை சிங்கள மக்கள் விரும்பவில்லை. இவை தான் இந் நாட்டு சிங்கள மக்களின் நியாயமான அச்சங்கள்.

சிறிமா சாத்திரி உடன்படிக்கையின் கீழ் 3, 25, 000 இந்தியர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்படவிருக்கிறது. இந் நிலையில் மாவட்ட சபைகளும் ஏற்பட்டால் நிலை சீர்கேடடையும்.'

இவ்வாறு அரியணை உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய தெவினுவர பா. உ. திரு. ரொனிடிமெல் குறிப்பிட்டுள்ளார்.

### வவுனியாவில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தொகுதிக்குப் போட்டியிட இருப்பவர் என வர்ணிக்கப்படும் ஒருவர் தனது வீரப் பிரதாபத்தை—தான் இங்கிலாந்து சென்றதைப் பற்றி பிதற்றினார். மக்கள் அவரது கோமாளிப் பேச்சை கிண்டல் செய்து சப்தமிட்டனர்.

#### அப்பாவி வன்னியன்

அந்நேரத்தில் அப்பாவி வன்னியன் ஒருவன்-பண்டாரவன்னியன் பரம்பரை வகையாக மாட்டிக் கொண்டான். கொண்டு வரப்பட்ட குண்டர் படையினர் மத்தியில். இறக்குமதி செய்யப்பட்ட குண்டர்கள் சுற்றி வளைத்து வன்னியனை வெளியே ஓட விடாது நடுவில் வைத்து கேள்வி முறை இல்லாது அடித்தனர். அவ்வன்னியனின் ஓலக் குரல் பண்டார வன்னியன் பரம்பரையைச் சேர்ந்த வவனியா பாராளுமன்ற உறுப்பினருக்குக் கேட்கவில்லைப்போலும். பாவம்!

#### ஜீ. ஜீயிடம் கேள்வி?

திருவாளர் பொன்னம்பலம் பேச எழுந்தார். முன் ஏற்பாடு செய்யப்பட்டபடி கொண்டு வரப்பட்ட குண்டர் படையில் முழுவெறியர் ஒருவர் எழுந்தார். உண்மை அவர் வாயால் வந்தது. ஆனால் அடி விழவில்லை. காரணம் அவர் குண்டர் படையுடன் வந்தவர். ''தமிழரசுக்காரர் [illegible] நீ செய்ததைச் சொல்லு பார்ப்பம்'' என்று கேட்டார்.

உடனே பொன்னம்பலம் ''இஞ்சை வா முன்னுக்கு வா'' என்று மேடைக்குமுன இருத்தித் தனது வீரப்பிரதாபங்களை வர்ணிக்கத்தொடங்கினார். அடிக்கடி உனக்கு விளங்குதே? விளங்குதே? என்று கேட்டார்.

மக்கள்கூக்குரலிட்டு பொன்னம்பலத்தைத் தொடர்ந்து பேசவிடவில்லை. இவ்வளவும் நடைபெற்றது வவனியாப் பொது மேடையில்.

இப்பொது மேடைக்குத் தமிழ் அரசுக் கட்சிப் பொதுச் செயலாளருக்கோ, தலைவருக்கோ வரும்படி அழைப்பு அனுப்பப்படவில்லை. அன்று வவனியா தமிழ் காங்கிரஸ் கிளையும் அங்கு அமைக்கப்பட்ட செய்தி பத்திரிகைகளில் வந்ததைப் பொது மக்கள் பார்த்திருப்பார்கள். இதுவா பொது மேடை?

### புதிய சமாதான...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சபை உறுப்பினராக கௌரவ உள்ளூராட்சி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

—கூட்டுறவு இயக்கப்பணிகளுக்காகவும்; ஆலய ஆக்கப் பணிகளுக்காகவும் அவ்வப்போது ஊக்கமும்—ஆக்கமும் அளித்து வரும் இவர், சமூகமுன்னேற்ற இயக்கங்கள் சிலவற்றில் பொறுப்பு வாய்ந்த பதவி வகித்து வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கல்முனைத்தமிழரசுக்கட்சிக்கிளையின் ஸ்தாபகர்களுள் ஒருவரும், போஷகர்களுள் ஒருவருமான இவர், கல்முனையில் நடந்து முடிந்த தமிழரசுக்கட்சியின் 10வது தேசிய மாநாட்டின் பொருளாளராகவும் கடமையாற்றி மாநாட்டின் வெற்றிக்காக அரும்பாடுபட்டுழைத்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சிறுகதை

# பாரம்

—"நந்தினி"

## முதற் படைப்பு

இக்கதையை எழுதி இருக்கும் அல்வாயைச் சேர்ந்த செல்வி நந்தினி சிறுகதை எழுத வேண்டும் என்ற ஆர்வம் படைத்தவர். சிறந்த இலக்கிய இரசிகை. சிறுகதைத் துறையில் ஈழத்தில் பெண்கள் போதியளவு ஈடுபடவில்லையே என்ற கவலை இவருக்கு உண்டு.

இவரது முதற்படைப்புத்தான் இச் சிறுகதை.

சுவரைவெறித்துப்பார்த்தபடி உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். வெளியே அம்மாவுடன் அடுத்த வீட்டுக்காரப் பெண் கதைத்துக் கொண்டிருக்கிருள். அவர்கள் பேசுவதெல்லாம் என் காதில் துல்லியமாக விழுந்து கொண்டிருக்கிறது. எங்கோ ஆரம்பித்த கதை கடைசியாக என்னைப் பற்றித் தான் முடியும் என்பது எனக்குத் தெரியும். கேட்டுக் கேட்டுச் சலித்துப் போன ஒரு சங்கதி. என்னைப் பொறுத்த வரையில் நிறைவேற முடியாத ஒரு பெரிய விடயம். எண்ணும் போதே பெருமூச்சு வருகிறது.

'இவர்களுக்கென்ன சொல்லிவிட்டுப் போவார்கள் அதற்கும் காலம் வர வேண்டாமா?' என என் மனம் எண்ணுகிறது. 'காலம். அது எபபோது தான் வரப் போகிறது. காலன் தான் வந்து கெடுத்துப் போட்டானே?' என்று இடைமறிக்கிறது என் சிந்தனை. அம்மாவின் விசும்பல் பலமாகக் கேட்கிறது.

'ம்... ஆசையாய் வளர்த்த ஆம்புளைப் புள்ளையை அநியாயமா பறிகுடுத்திட்டன்' 'சும்மாயிரு குண்டுமணி, செத்தவன் செத்துப் போனுன். இருக்கிறதுகளையாவது காப்பாத்திற வழியைப் பாருங்கோ'

'பிள்ளை இஞ்சை கடைசியாய் வந்தபோது கூட என்னோடை ஆறுவாயிலை கதைக்கக் கூட இல்லை அதுக்குள்ள இப்படி வருமெண்டு கண்டேனே?'

'குண்டுமணி...குண்டுமணி உனக்கு எத்தனை தரஞ் சொல்லிறது? பிள்ளையளு மெல்லே உன்னைப் பாத்திட்டு அழப் போகுதுகள் கொஞ்சம் பேசாமல் இரு.'

'எப்படியணை நான் பேசாமல் இருப்பன். என்ரை மூத்தபெடியெல்லையணை.'

'சும்மாயிரு குண்டுமணி... தம்பிராசாவுக்கும் விதி அப்பிடி ம்... அது சரி மருமோளும் பிள்ளையளும் எப்பவருகினமாம்.'

'அவை ஏனெணை வரப் போகினம் எங்கடை சீர் கெடுதியைப் பார்க்கவே?'

'ஏன் ஒரு மாதிரிக் கதைக்கிருய்...'?

'இல்லையெணை அந்தப் பிள்ளையளையாவது ஒருக்காக் கொண்டுவந்து காட்ட வேணுமெண்டு நினைக்கேலலை.'

'ஏன் அவயள் தான் கொண்டு வந்து காட்ட வேணுமே? நீங்கள் போய்ப் பாக்கக் குடாதே?'

'என்னெண்டெணை போறது? பொடியளுக்குப் பள்ளிக்குடம். எனக்குஞ் சுகமில்லை. இந்தாளும் பத்தியக்காரன். நான் என்ன செய்யிறது.'

'ம்...வவுண்கூட உங்களைக் கைவிட்டிட்டுது. பொடியனைப் பெத்தும் புண்ணியமில்லையப்பா?'

'உண்மையைச் சொன்னல் கேக்காத பிள்ளையள் என்னத்துக்கெணை?'

'அது சரி...நான் ஒண்டு கேக்கிறன் வித்தியாசமாய் எடுப்பியே?'

'இல்லையெணை கேள்.'

'இல்லைக் குண்டுமணி, பெட்டையை வைச்சுக் கொண்டிருக்கிறியள். என்னெண்டாலென்ன செய்யுங் கோவன்.'

'ஓமெணை எத்தினை நாளுக்குத் தான் வைச்சுக் கொண்டிருக்க முடியும். மூத்த பிள்ளையைத்தான் நம்பியிருந்தன். அவனும் போய்ச் சேந்திட்டான். வவுணனும் எங்களை வேண்டாமெண்டு நினைச்சிட்டான். மற்றவன் வருத்தக்காரன். நான் என்னெணை...ம் ...வவுணனை வைச்சு ஏதாயினும் செய்திருக்கலாம். அவன் இப்படிச் செய்வனெண்டு கண்டனே, அந்தாளிட்டைச் சொன்னல் என்னெட்டை என்ன கிடக்குது எண்ணுது. நான் தனிய என்னெண்டணை...?'

'ஏன் குண்டுமணி சகாயரிட்டைஇன்னுமொருக்காச் சொல்லிப்பாரன்.'

'ஓமெணை என்னெண்டாலென்ன செய்யத்தான் வேணும்......?

✱

நான் நினைத்த மாதிரி என்னைப் பற்றித் தான் கதை திரும்பிவிட்டது. இந்தக் குடும்பம் முன்பிருந்த நிலைக்கும் இப்போது இருக்கும் நிலைக்கும் எவ்வளவு வித்தியாசம்.

'சகாயருக்கென்ன பெரிய கல்வீடு உத்தியோகக்காரனுய் மூத்தபிள்ளை இருக்கிருன். மற்றவனும் உழைப்பாளி. அவரை இனிப் பிடிக்கேலுமே?' என்ற ஊராரின் கதை, பாவம் சகாயர் மூத்த பெடியனும் செத்துப் போனுன். மற்றவனும் இவையளைக் கைவிட்டிட்டான். குமர்ப் பெட்டையொண்டு வீட்டிலை சுமையாய் இருக்குது எப்படித்தான் சமாளிக்கப் போகுதோ அந்தாள்...

என்று திரும்பிய கேவல நிலையை அடைந்து விட்டோம். ஐந்து ஆண்பிள்ளைகளுக்கு ஒரு பெண்பிள்ளையெண்டு ஊரார் ஆச்சரியப்பட்டது மாறும் முன்பே, மூத்த அண்ணனும் இறந்து விட்டான், மற்றவரும் மறந்துவிட்டார். இப்போது எனது நிலை......ஆம் நான் இந்தக் குடும்பத்தின் தீராத பிரச்சினை.

இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவே கிடையாதா? எங்கள் குடும்பத்தின் பாரம் தீராதா? இதற்கு முடிவே கிடையாதா?

சுவர் கடிகாரத்தில் மணி அடிக்கிறது. எண்ணுகிறேன். 'ஒன்று...இரண்டு...மூன்று ...நாலு...

பத்துமணி அடித்து ஓய்கிறது.

அம்மா என்னைக் கூப்பிடுகிருு.

'பிள்ளை பிள்ளை உந்தாள் வந்திட்டுது போலை. கொண்டு வந்ததை வாங்கி வையன்''

நான் எழுந்து வெளியில் வருகிறேன்.

'மணி...மணி'' குரல் கொடுக்கிருர் ஐயா' சாமான்களை வாங்கிக் கொள்கிறேன்.

சாக்குக் கட்டிலில் போய் படுக்கும் ஐயா முகட்டை வெறித்துப் பார்த்தபடி படுத்துக்கிடக்கிருர். இனி அவரை எழுப்பிறதெண்டால் கொஞ்சங் கஷ்டந்தான்.

அம்மாவும் யோசனையில் ஆழ்ந்துவிட்டா. தங்கர் வருகிருன்.

'தங்கச்சி...தங்கச்சி சின்னண்ணைக்கு ஒரு காயிதம் வந்திருக்கு''

'ஆர் போட்டது'

'ஆரெண்டு தெரியேல்லை

உடைச்சுப் பாக்கட்டே பேத்து அந்தாள் பேசும் என்ன?'

'ஓ என்னத்துக்கு வீண் கரைச்சலை'

'அப்ப இதை என்ன செய்யிறது''

'கொண்டுபோய்க் குடன்'

'ஆள் எங்க நிக்குதோ தெரியாது. வெய்யிலாயுங் கிடக்குது சரி என்ன செய்யிறது? போய்த் துலைக்கிறன்'

வந்த வேகத்தில் திரும்பிப் போகிருன் அண்ணன்.

'இந்தச் சோம்பேறி வருங்காலத்தில் எப்படித் தான் பிழைக்கப்போருனோ' என்று எண்ணுகிறேன்

மனம் மீண்டும் என்னைப் பற்றித் தான் எண்ணுகிறது.

'அதுகள் ஆம்பிளையள் எப்பிடியும் வாழும்

நான்...கடவுளே இந்தக் குடும்பத்துக்குப் பாரம் நான் தானே! என்னை கெதியிலே கொண்டுபோ''

'டங்'... பத்தரை மணி அடிக்கிறது. நான் உலையை வைத்து நெருப்பை மூட்டுகிறேன்.

'அம்மா எந்த அரிசியைப் போட'

ஊரரிசியிலையும் சேரல் பச்சையிலுங் கலந்து போடன்'

'எத்தினை கொத்துப் போட'

'ஒரு கொத்தைதத்தான் போடும்...நாங்கள் இஞ்சை மிறுதுவாய்த் தின்னிறம். அவன் வவுணன் அங்கை என்ன செய்யிருனோ தெரியாது. பட்டினி கிடந்தாலும் எங்களுக்குத் தெரியப் போகுதே

அம்மா ஒப்பாரி துவங்கிருு. நான் சிறிது நேரம் பேசாமல் இருக்கிறேன்.

'தங்கருக்கு என்ன செய்யிறது'

'என்னெண்டாலென்ன செய். அவன் வந்து சத்தம் வைச்சுக் கொண்டு நிக்கப் போருன்...'

'வந்திந்தக் கறியை அறனம்மா''

'ம்... கொஞ்சநேரம் சும்மா இருககலாமெண்டால் இந்தவீட்டிலை முடியுமே.'

முணுமுணுத்தபடி அம்மா வருகிருு. சமையல் மும்முரமாய் நடக்கிறது.

அம்மாவை பார்க்க எனக்குப் பாவமாக இருக்கிறது. அவவுக்குத் தான் எத்தனை கரைச்சல். இதுக்கிடையிலை நானும் இருந்து கொண்டு... 'ம்...கடவுளே என்னைக் கெதியிலை எடுத்துக் கொண்டு இந்தக் குடும்பத்தின் பாரத்தைக் குறை'... மனதில் ஏதோ விரக்தியான எண்ணங்கள். கூடப் பிறந்த அண்ணன்மார் இரண்டுபேர் இருக்கேக்கை நடவாத எனது திருமணம் இனி எங்கே நடக்கப் போகுது.

'பிள்ளை...பிள்ளை அடுப்பு நூருது போலை கிடக்குது. விறகு எடுத்துக் கொண்டு வா'

சிந்தனை தீர வில்லை. 'நான் இல்லா விட்டால் இந்தக் குடும்பத்தின் பாரம் கொஞ்சமெண்டாலென்ன குறையும்'

குனிந்துவிறகுஎடுக்கிறேன் 'சுருக்கென்றுஎனது கையில் ஏதோ கடித்ததுபோல் வலி, திடுக்கிட்டுப் பார்க்கிறேன் பாம்பு......அது கவலையின்றி ஊர்ந்து செல்கிறது.

நான் கத்தவில்லை. நானும் இதைத்தான் விரும்பினேன். கடவுள் எனக்குக் கிருபை செய்து விட்டார். இனி எனது தாய் தந்தையருக்கும் பிரச்சினை இருக்காது. அவர்களதுபாரம் குறையும்.

'பிள்ளை...பிள்ளை கெதியாய் விறகைக் கொண்டு வா......

அம்மாவின் குரல் தொலையாய் கேட்கிறது

தலை சுற்றுகிறது...நான் சிரிக்க முயல்கிறேன்...எனது மனதிலிருந்த பாரம்... கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து கொண்டிருக்கிறது...எதோ...ஒரு...சூனிய வெளி...

(யாவும் கற்பனை)

## ஈழத் தமிழ்ப் படவுலகின் மைல் கல்— நிர்மலா

ஈழத்தில் தமிழ்ப் படங்கள் தயாரிக்க முடியுமா? என்ற குரல் பல ஆண்டுகளுக்கு முன் தமிழ் மக்களின் உள்ளங்களில் எல்லாம் எதிரொலித்தது.

ஏன் முடியாது என்ற பதிலுடன் தோட்டக்காரி, சமுதாயம், கடமையின் எல்லை, பாசநிலா போன்ற படங்கள் உருவாகி வெளிவந்தன. இப்போது இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஐந்தாவது திரைப்படம் என்ற முத்திரையுடன் ஈழத் தமிழ்த் திரைப்படத் தொழிலில் ஒரு மைல் கல்லாக வெளிவந்திருக்கிருள் நிர்மலா. கலாபவன பிலிம்ஸாரின் 2-வது தயாரிப்பு இது.

விரைவில் தமிழ் நாட்டுத் திரைப் படங்களையும் தோற்கடிக்கக் கூடியதான சிறந்த தமிழ்ப் படங்களை ஈழம் உருவாக்கும் என்ற நம்பிக்கையைத் தருகிருள் நிர்மலா.

தமிழ் நாட்டிலிருந்து இறக்குமதியாகும் பலதமிழ் படங்களில் இல்லாத ஓர் அம்சம் நிர்மலாவில்இருக்கிறது. அதுதான் சிறந்த கதை அம்சம்,

ஒரு பெண்ணின் பள்ளிப் பருவத்தில் எதிர்பாராமல் நடந்துவிட்ட ஒரு சிறு சம்பவம் பின்னர் அவளை எப்படியெல்லாம் ஆட்டி அலைக்கிறது என்பதை நிர்மலா கதை உணர்ச்சியுடன் சித்திரித்துச் செல்கிறது. மூலக் கதை எழுதிய துறையூர் மூர்த்தி பாராட்டப்பட வேண்டியவர்.

படப்பிடிப்பு, படத்தை வெற்றிக்கு கை கொடுக்கிறது. கண்டியின் எழில் மிகு காட்சிகள் படத்தில் நிறைய இடம் பெறுகின்றன. இந்த வகையில் சுண்டிக்குளி சோமசேகரனும், வின்சென்டும் சபாஷ் பெறுகின்றனர்.

ஈழத்தின் தவநடிகன் என்று போற்றப்படும் வைரமுத்துவின் 'மயான காண்டமே'படத்திற்குஉயிர் கொடுக்கிறது. சிவாஜி போன்ற நடிகர்கள் ஏன் இலங்கையில் தோன்ற முடியாது என்ற எண்ணம் வைரமுத்துவின் நடிப்பைப் பார்க்கும் போது நமக்கு ஏற்படாமலிருக்க முடியாது.

நிர்மலாவின் தந்தையாக வரும் திரு. சின்னையாவும், தீப்பெட்டித் தொழிற்சாலை முதலாளியாக வருபவரும் (பெயர் தெரியவில்லை)இயல்பாக நடித்துள்ளனர்.

சந்திரகலா, கோகிலா இருவர் நடிப்பும் படத்துக்குச் சிறப்பூட்டுகின்றன.

தங்கவடிவேல், ரகுநாதன் இருவரது நடிப்பிலும், இடையிடையே 'நாடக பாணி' தலை தூக்குகிறது என்ருலும் அடுத்த படத்தில் நடிக்கும் போது இக்குறை நீக்கப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கலாம்.

எதிர் காலத்தில் நான் ஈழத்தின் பிரபல டைரக்டராவேன் என்று நிர்மலா மூலம் சொல்லாமல் சொல்லுகிருர் எஸ். அருமைநாயகம்.

மொத்தத்தில் படம் எப்படி என்கிறீர்களா? காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு தானே!

—மகேஸ்

## தங்குமடம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியாததால் தான் என்பதில் சுமைதாங்கிக்கு சந்தேகமில்லை.

ரொம்பப்படித்தமேதாவிகளெல்லாம், ஆசிரியரென்றும் பேராசிரியரென்றும், தமிழ் கடலென்றும், நிலமென்றும், வித்துவான் என்றும் பெற்ற பெயர்களெல்லாம் குறுகிய மனப்பான்மைமையால் சுமைதாங்கியில் மோதி இப்படியா போகவேண்டும்? என சுமைதாங்கி கவலைப்படுகுதுங்க.

அட்ட இந்த நேரத்தில் பார்த்து என் மேல் இன்ஞெரு போஸ்ரரை ஒட்டுருங்க... 'வல்லவனுக்கு வல்லவன்...' ரொம்ப கூடப் போச்சுங்க அடுத்த வாரச் வாருங்க பேசிக்குவம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 5 - வது மங்களகரமான வாரம்!

"பத்திரிகைகள ஒரே குரலில் பாராட்டுகின்றன! இரசிகப்பெருமககளின் பாராட்டுதல்கள் வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன!! வசூலில் ஓர் மாபெரும் சாதனையை நிலநாட்டிக் கொண்டிருக்கிறது!!! சென்னையில் 150 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றிமுரசு கொட்டி இன்னும் ஓடிக்கொண்டிருக்கும் ஒப்புயர்வற்ற ஒரே சித்திரம்;

சென்ட்ரல் (மருதானை) · நவா (கொம்பனித்தெரு) · ராணி (யாழ்நகர்)

ஜோதி (திருமலை) · ராஜேஸ்வரா (மட்டுநகர்) · லிபர்ட்டி (ஹற்றன்) · மீபுர (நீர்கொழும்பு)



★ ஜெமினிகணேசன் ★ சரோஜாதேவி ★ நாகேஷ்
★ விஜயநிர்மலா ★ சிவகுமார் ★ புஷ்பலதா
★ டி. கே. பகவதி ★ எல். வரலட்சுமி நடித்த

'இயக்குனர்திலகம்' கோபாலகிருஷ்ணனின்

# புண்ணியமா? பாசமா?

எதிர்பாருங்கள்!

★ சிவாஜி ★ சரோஜாதேவி ★ பாலாஜி ★ நாகேஷ்

—நடித்த—

# என் தம்பி

## இப்பொழுது காட்சியளிக்கிறேன்!



கப்பிட்டல் (கொழும்பு) · பிளாசா (வெள்ளவத்தை) · ஷைலன் (கொழும்பு) · விஜயா (மட்டுநகர்)

ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) · வெம்பிளி (கண்டி) · ராஜ் (நீர்கொழும்பு)

ரவிச்சந்திரன், ஜெயலலிதா,
நாகேஷ், மனோரமா, மனோகர்,
அசோகன், முத்துராமன்

—நடிக்கும்—

(ஈஸ்ட்மன் கலர்)

# நான்

பலரின் வேண்டுகோளுக்கிணங்க!

கிங்ஸ்லி (கொழும்பு)

## கல்யாண பரிசு

நீண்டகாலமாக காத்திருந்த திரையோவியம்

29ந் திகதி முதல் லிடோ (பொரளை)

## சங்கம்

## இப்பொழுது காட்சியளிக்கிறது!

வின்சர் (யாழ்நகர்) · இம்பீரியல் (மட்டுநகர்)

## ஜூலை 29-ம் திகதி திங்கள் முதல்!

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) · ஈரோஸ் (பாமன்கடை) · கெயிட்டி (கொழும்பு) · அசோகா (புத்தளம்) · கிங்ஸ் (பதுளை) · நெல்சன் (திருமலை)



* எம். ஜி. ஆர். * சரோஜாதேவி
* ஜெயலலிதா * நம்பியார்
* நாகேஷ் * அசோகன்
* கே. ஆர். ராமசாமி
* மனோகர் * மாதவி

—நடிக்கும்—

# அரச கட்டளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிக்கை சிலோன் நியூஸ்பேப்பர் லிமிட்டெட்டாரால் ... பண்டாரநாயக்க வீதி, 194, ஏ, இலக்கத்தில் 1968-ம் வருடம் ஜூலை மாதம் 24-ம் திகதி புதன் கிழமை அச்சிட்டுப்பிரசுரிக்கப்பட்டது.